Registered as Newspaper in Sri Lanka. பக்கங்கள்: ஆறு விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 பிரமோதூத வூ சித்திரை மீ 12ஆம் உ புதன்கிழமை (25-04-1990) ஹிஜ்ரி 1410 றம்ழான் 28 ஓசை 66

## மத்திய கிழக்கு தூதரகங்களில் உள்ள நான்கு தொழில் அதிகாரிகள் திருப்பி அழைப்பு

(கொழும்பு)

மத்திய கிழக்கான ஸ்ரீலங்கா தூதராலயங்களில் கடமையாற்றும்நான்கு தொழில் அதிகாரிகளையும் திருப்பி அழைக்கும்படி தொழிலமைச்சர் ஜி. எம். பிரேமச்சந்திரா அமைச்சின் செயலாளரைப் பணித்துள்ளார். இதன் பிரகாரம் குவெயித், ஈராக், ஐக்கிய அரபு, எமிரேட்ஸ் சவூதி அரேபியா ஆகிய நாடுகளில் ஸ்ரீலங்கா தூதுவராலயங்களில் கடமையாற்றும் தொழில் இணைப்பு அதிகாரிகளை உடனடியாக நாடு திரும்பும்படி ரெலெக்ஷ் மூலம் பணிக்கப்பட்டுள்ளது.

தொழிலதிகாரிகளின் ஒழுங்கீனம் தொடர்பாகச் செய்யப்பட்ட பல முறைப்பாடுகளைத் தொடர்ந்தே மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாம். தொழிலதிகாரிகள் நாடு திரும்பியதும் பூரண விசாரணை மேற்கொள்ளப்பட்டு தொழிலதிகாரிகள் முறை புனரமைக்கப்படவுள்ளது. (6ம் பக்கம் பார்க்க)

# ஆயுதம் தாங்கிய படைகள், குடியேறிவிட்ட சிங்களவர்கள்

## இவர்கள் மத்தியிலேயே இன்று திருமலை தமிழ் மக்கள் வாழும் நிலை!

### புங்குடுதீவில் மகேந்திரராசா

(சிறப்புச் செய்தியாளர்)

சுற்றிவர திட்டமிட்டு குடியேற்றப்பட்ட சிங்களவர்கள். அவர்கள் கையில் அவர்களின் பாதுகாப்புக்கென வழங்கப்பட்ட ஆயுதங்கள். இதற்கு மேலாக சிங்கள இராணுவ முகாங்கள் இவற்றிற்கு மத்தியில்தான் திருமலையில் தமிழ்த் தேசிய இனம் வாழ்ந்துகொண்டிருக்கின்றது. என நேற்றுமாலை புங்குடுதீவு மகாவித்தியாலய முன்றலில் நடந்த தேனிசை விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்ட விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கே. மகேந்திரராசா தெரிவித்தார்,

அவர் தொடர்ந்து பேசுகையில் திருமலையில் அமைந்துள்ள 37 இராணுவ முகாங்களின் நோக்கம் குடியேற்றப்பட்ட சிங்கள மக்களைப்பாதுகாப்பது, சிங்களக் குடியேற்றத்திற்கு ஒத்தாசைசெய்வது, தமிழ்ப் பேசும் மக்களை அம்மண்ணில் இருந்து அகற்றுவதும் அழிப்பதுமாகும் எனவும் தெரிவித்தார்.

சாவிற்கு மத்தியில் நின்றுகொண்டு எமது சுய நிர்ணய உரிமைக்கான போராட்டத்திற்கு முழுமையாக வெளிப்படையாக ஆதரவு தந்திருக்கும் இம்மக்கள் எமது போராட்டத்திற்குப் புத்துணர்ச்சியைத் தந்திருக்கின்றார்கள் எனவும் தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில் நான் கடந்த வாரம் திருக்கோணமலை சென்றிருந்தேன் அங்கு பெருமளவில் மக்களின் எழுச்சியைக் கண்டேன்.

கிழக்கு மாகாணத்தில் 25 வீதத்திற்கும் அதிகமான சிங்கள மக்களால் 50 வீதத்திற்கு மேலதிகமான நிலப்பரப்பு ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. 1921 இல் கிழக்கு மாகாணத் 4·5 வீதமாக இருந்த சிங்கள மக்கள் இன்று 25 வீதத்திற்கு மதிகமாக அங்கு திட்டமிட்டுக் குடியேற்றப்பட்டுள்ளார்கள்.

திட்டமிட்ட குடியேற்றத் (6ஆம் பக்கம் பார்க்க)



## தேர்தல் பதவி நோக்கமல்ல மக்களை திரட்டுவதே நோக்கம்

—யோகி

(சிறப்பு நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் பிரிவை கட்சியாக பதிவு செய்வதின் நோக்கம் தேர்தலில் நிற்பதற்கோ அல்லது பதவிகளை எதிர்பார்த்தோ அல்ல. விடுதலைப் போராட்டத்திற்கு உறுதுணையாக இருந்தவரும் மக்களை வெகுசன அமைப்பாக மாற்றி அவர்கள் அரசியலில் பங்கு பற்றுவதற்கு கட்சி அமைப்பு பயன்படும் என்னும் ஒரே நோக்கில் தான் அமைக்கப் பட்டுள்ளது என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னனிச் பொதுச் செயலாளர் யோகரெட்ணம் யோகி நேற்று புங்குடுதீவில் நடந்த தேனிசை நிகழ்ச்சியில் பேசும் போது தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில் கட்சியின் பத்துக் குறிக்கோள் (6ம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் தூதரக அதிகாரி யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகராய மூன்றாவது உயர் அதிகாரி செல்வி ஜேன் கொபீல்ட் அவர்கள் நேற்று யாழ். மாநகராட்சி அலுவலகத்திற்கு விஜயம் செய்து அங்கு ஆணையாளர் திரு.வீ.பி.பாலசிங்கத்துடன் உரையாடி மாநகரசபை அலுவலகத்தில்உள்ள ஒவ்வொரு பிரிவும் எவ்வாறு இயங்குகின்றது என்று நேரில் பார்வையிட்டுள்ளார்.

(லோ)

## தமிழரைப் புலிகள் என அழைக்கவைத்தபோராட்டம்

(சிறப்பு நிருபர்)

தமிழரைக் எளிய வார்த்தைகளால் வர்ணித்த பேரினவாதிகள் இன்று புலிகள் என வர்ணிக்க வழிவகுத்தது எமது படையின் வீரம் செறிந்த போராட்டமும் தலைவர் பிரபாகரனின் வழிகாட்டலுமே காரணம் என புங்குடுதீவில் நிகழ்ந்த தேனிசை விழாவில் பேசும் போது கவிஞர் காசி ஆனந்தன் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் தமிழன் தன்மானம் உடையவன் என உலகஅரங்கிற்ல் எடுத்தியம்பக் காரணகர்த்தாவாக இருந்ததும் தலைவர் பிரபாகரனே என்றும் கூறினார். மேலும் பேசுகையில் தேனிசைச் செல்லப்பா அவர்கள் தனது கலைத்திறன் மூலம் ஆரம்பகாலம் முதல் இன்றுவரை உறுதுணையாகச் செயலாற்றி வருவதாகவும் குறிப்பிட்டார்.

## பேச்சுவார்த்தையைக்குழப்பும் முயற்சி வெற்றியளிக்காது!

- ரஞ்சன் விஜயரட்ணா

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும் அரசிற்கும் இடையில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளை குழப்ப எடுக்கப்படும் முயற்ச்சிகளுக்கு வெற்றி கிடைக்காது என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரும், தோட்டத்துறை அமைச்சருமான ரஞ்சன்விஜயரெட்ணா நேற்று

கும் போது தெரிவித்தார்.

எதிர்கட்சிகள் குட்டையைக் குழப்பி, இரத்தத்தில் நீச்சலடிக்கப் பார்க்கின்றன. பிரச்சினைகளைத் தீர்ப்பது எப்படி என்பது எமக்குத் தெரியும் எனவும் தெரிவித்தார். வடக்கு-கிழக்கில் உள்ள

றனர். இதில் சம்பந்தப்பட்டவர்களை இடமாற்றம் செய்ததன் மூலம் நிலைமை சுமுகமாக்கப்பட்டுவிட்டது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த இரு எம். பிக்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் முகமாகவே இவ்

## பாகிஸ்தானுக்குஅவுஸ்திரேலியா மிராஜ் யுத்த விமானங்கள்

(சிட்னி)

பாகிஸ்தான் விமானப்படைக்கு அவுஸ்திரேலியா ஐம்பது

அமைச்சர் றொபேர்ட் றே தெரிவித்துள்ளார்.

1988 ஆம் ஆண்டு இந்த

### வட பிராந்திய போக்குவரத்துச்சபை

## யாழ் - மட்டு பஸ் சேவைக்கு

(சிறப்புச் செய்தியாளர்)

சுற்றிவர திட்டமிட்டு குடியேற்றப்பட்ட சிங்களவர்கள். அவர்கள் கையில் அவர்களின் பாதுகாப்புக்கென வழங்கப்பட்ட ஆயுதங்கள். இதற்கு மேலாக சிங்கள இராணுவ முகாங்கள் இவற்றிற்கு மத்தியில்தான் திருமலையில் தமிழ்த் தேசிய இனம் வாழ்ந்துகொண்டிருக்கின்றது. என நேற்றுமாலை புங்குடுதீவு மகாவித்தியாலய முன்றலில் நடந்த தேனிசை விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்ட விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கே. மகேந்திரராசா தெரிவித்தார்,

அவர் தொடர்ந்து பேசுகையில் திருமலையில் அமைந்துள்ள 37 இராணுவ முகாங்களின் நோக்கம் குடியேற்றப்பட்ட சிங்கள மக்களைப்பாதுகாப்பது, சிங்களக் குடியேற்றத்திற்கு ஒத்தாசைசெய்வது, தமிழ்ப் பேசும் மக்களை அம் மண்ணில் இருந்து அகற்றுவதும் அழிப்பதுமாகும் எனவும் தெரிவித்தார்.

சாவிற்கு மத்தியில் நின்று கொண்டு எமது சுய நிர்ணய உரிமைக்கான போராட்டத்திற்கு முழுமையாக வெளிப் படையாக ஆதரவு தந்திருக்கும் இம்மக்கள் எமது போராட்டத்திற்குப் புத்துணர்ச்சியைத் தந்திருக்கின்றார்கள் எனவும் தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில் நான் கடந்த வாரம் திருக்கோணமலை சென்றிருந்தேன்



அங்கு பெருமளவில் மக்களின் எழுச்சியைக் கண்டேன்.

கிழக்கு மாகாணத்தில் 25 வீதத்திற்கும் அதிகமான சிங்கள மக்களால் 50 வீதத்திற்கு மேலதிகமான நிலப்பரப்பு ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. 1921 இல் கிழக்கு மாகாணத் 4·5 வீதமாக இருந்த சிங்கள மக்கள் இன்று 25 வீதத்திற்கு மதிகமாக அங்கு திட்டமிட்டுக் குடியேற்றப்பட்டுள்ளார்கள்.

திட்டமிட்ட குடியேற்றத்

(6ஆம் பக்கம் பார்க்க)

ஆணையாளர் திரு.வீ.பி.பால சிங்கத்துடன் உரையாடி மாநகரசபை அலுவலகத்தில்உள்ள ஒவ்வொரு பிரிவும் எவ்வாறு இயங்குகின்றது என்று நேரில் பார்வையிட்டுள்ளார்.

(லோ)

போராட்டமும் தலைவர் பிரபாகரனின் வழிகாட்டலுமே காரணம் என புங்குடுதீவில் நிகழ்ந்த தேனிசை விழாவில் பேசும் போது கவிஞர் காசி ஆனந்தன் குறிப்பிட்டார்.

கூறினார், மேலும் ... யில் தேனிசைச் செல்லப்பா அவர்கள் தனது கலைத்திறன் மூலம் ஆரம்பகாலம் முதல் இன்றுவரை உறுதுணையாகச் செயலாற்றி வருவதாகவும் குறிப்பிட்டார்.

# பேச்சுவார்த்தையைக்குழப்பும் முயற்சி வெற்றியளிக்காது!

**- ரஞ்சன் விஜயரட்ணா**

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும் அரசிற்கும் இடையில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளை குழப்ப எடுக்கப்படும் முயற்ச்சிகளுக்கு வெற்றி கிடைக்காது என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரும், தோட்டத்துறை அமைச்சருமான ரஞ்சன்விஜயரெட்ணா நேற்று மாலை பாராளுமன்றத்தில் கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கும் போது தெரிவித்தார்.

எதிர்கட்சிகள் குட்டையைக் குழப்பி, இரத்தத்தில் நீச்சலடிக்கப் பார்க்கின்றன. பிரச்சினைகளைத் தீர்ப்பது எப்படி என்பது எமக்குத் தெரியும் எனவும் தெரிவித்தார். வடக்கு-கிழக்கில் உள்ள சில பொலிஸார் தான் புலிகளைத் தூண்டிவிட முயன்றனர். இதில் சம்பந்தப்பட்டவர்களை இடமாற்றம் செய்ததன் மூலம் நிலைமை சுமுகமாக்கப்பட்டுவிட்டது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த இரு எம். பிக்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் முகமாகவே இவ்வாறுஅமைச்சர்தெரிவித்தார்.

# பாகிஸ்தானுக்குஅவுஸ்திரேலியா மிராஜ் யுத்த விமானங்கள்

(சிட்னி)

பாகிஸ்தான் விமானப்படைக்கு அவுஸ்திரேலியா ஐம்பது மிராஜ் ஜெட் விமானங்களை விற்பனை செய்யவுள்ளதாக அவுஸ்திரேலியப் பாதுகாப்பு அமைச்சர் றொபேர்ட் றே தெரிவித்துள்ளார்.

1988 ஆம் ஆண்டு இந்த யுத்த விமானங்களின் விற் விற்பனை குறித்து அவுஸ்தி

(6ஆம் பக்கம் பார்க்க)

# கரவெட்டி, கரணவாய் பகுதியில் இரவுத்திருடர்கள் தொல்லை

(கரவெட்டி)

கரவெட்டி கரணவாய்ப் பகுதிகளில் அண்மைக்காலமாக கொள்ளைச் சம்பவங்கள் தலைவிரித்தாடுவதாக இப்பகுதி மக்கள் புகார் செய்துள்ளனர். இதனால் இவர்கள் நள்ளிரவு வேளைகளில் விழிப்பாக இருக்கவேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் கரவெட்டி சண்டில்குளம் பகுதியிலுள்ள எஸ். பாலகிருஷ்ணன் என்பவரது வீட்டில் புகுந்த கள்வர் கோஷ்டியொன்று வீட்டிலுள்ள 10 தங்கப்பவுண் தாலியுட்பட 15தங்கப்பவுண் நகைகள், சிற்றிசன் கைக்கடிகாரம் முதலானவற்றை கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாகத்தெரிவிக்கப்படுகின்றது.

வீட்டு உரிமையாளர்ஆழ்ந்த

(6ஆம் பக்கம் பார்க்க)

# அரச கரும மொழிக் கொள்கை தீவிரமாக அமுலாகும்

(கொழும்பு)

அரசகரும மொழிக் கொள்கை இனிமேல் நாட்டில் தீவிரமாக் செயற்படுத்தப்படும் என பொதுநிர்வாக உள்நாட்டு, மகாணசபைகள் அமைச்சர் பெஸ்டஸ்பெரேரா தெரிவித்துள்ளார்.

சிங்களம் தமிழ் ஆகியனஉத்தியோக மொழியாகவும் ஆங்கிலம் இணைப்பு மொழியாகவும் இருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல அரசாங்க நிறுவனங்கள் அரசகரும மொழிக் கொ

(6 ஆம் பக்கம் பார்க்க)

வட பிராந்திய போக்குவரத்துச்சபை

# யாழ் - மட்டு. பஸ் சேவைக்கு ஒத்துழைப்புத் தரவில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - யாழ்ப்பாணம் பஸ் சேவையை சீராக நடாத்துவதற்கு வடபிரந்திய போக்குவரத்துச் சபை ஒத்துழைப்பு தருவதில்லை என மட்டக்களப்பு டிப்போ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நாட்டு நிலைமை வழமைக்குத் திரும்பியதையடுத்து மட்டக்களப்பு டிப்போ இரவு நேரம் ஒரு பஸ் சேவையை நடாத்தி வந்தது. ஆனால் கோண்டாவில் டிப்போ இதனை நடாத்த முன்வராததால் மட்டக்களப்புடிப்போவின் அந்த சேவையும் நிறுத்தப்பட்டுள்ளது,

முன்னர் கல்முனையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு கல்முனை டிப்போவால் சேவைகள் நடாத்தப்பட்டது. இத

(6ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டுறவுச் சங்க ஊழியர்க்கு ஊக்குவிப்பு பணம் கிடைக்கும்

(வவுனியா)

வவுனியா தெற்குப் தமிழ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் பணிபுரியும் நிரந்தர ஊழியர்களுக்கு, ஊக்குவிப்பு பணம் வழங்கப் படவுள்ளது.

கடந்த சனிக்கிழமை மேற்படி சங்கத்தின் சமாஜத்தில் நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டத்தில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நிரந்தரமாகப் பணிபுரியும் ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தில் அரைவாசிப் பணத்தை ஆறு மாதங்களுக்கு வழங்கத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

வட-கிழக்கு மாகாணத்தில் எபபகுதியிலும் ஊழியர் ஊக்குவிப்புப் பணம் பலநோக்குக் கூட்டறவு ஊழியர்களுக்கு இதுவரைவழங்கப்படவில்லை.

(6ஆம் பக்கம் பார்க்க)

# ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி குழப்பத்தை ஏற்படுத்த முயற்சி

**- ரணில் விக்கிரமசிங்க**

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் இனவாதத்தை உருவாக்கி குழப்பங்களை ஏற்படுத்தி மீண்டும் பிரச்சினைகளை ஏற்படுத்த முயல்கின்றது என அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா நேற்றுபாராளுமன்றத்தில் கூறினார்.

வடக்கு-கிழக்கு பிரச்சினைகள், தெற்கில் ஜே. வி. பி. பிரச்சினைகள் என்பவற்றால் நாட்டின் பொருளாதாரம், பெரிதும் பாதிக்கப்பட்டு வாழ்க்கைச்செலவு அதிகரித்தது. மீண்டும் அதனை வழமைக்கு கொண்டுவர வேண்டும் என்றும் அவர் சொன்னார்.

சுதந்திரக்கட்சியினர் வெளிநாட்டு உதவிகள் கிடைக்கக் கூடாது எனப் பிரச்சாரம் செய்கின்றனர். ஆனால் இங்கே வந்து பொருட்கள் விலை அதிகரிப்புஎனவும் கூறுகின்றனர் என்றார்.

# திருநெல்வேலியில் பஸ் விபத்து

(சுதுமலை)

கோண்டாவில் டிப்போவிற்குச் சொந்தமான அசோக் லேலைண்ட் சிறிய ரக பஸ் திருநெல்வேலியில் விபத்திற்குள்ளானது. இந்த பஸ்ஸில்

(6ம் பக்கம் பார்க்க)

# எதிர்க் கட்சிகளுடன் பாலகுமாரன் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கை அரசமைப்பில் ஆறாவது திருத்தத்தை நீக்குவது சம்மந்தமாகவும் இனப் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காண்பது சம்மந்தமாகவும் ஈரோஸ் இயக்க பொதுச்செயலாளரும். ஈழவர் முன்னணிச்செயலாளர் நாயகமுமான திரு. வே. பாலகுமாரன் எதிர்க்கட்சியினருடனும் முஸ்லீம் காங்கிரஸ்காரர்களுடனும் பேச்சுவார்த்தை நடாத்திவருகிறார்.

நேற்று முன்தினம் முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்பைச் சந்தித்துப் பேசிய திரு பாலகுமாரன் மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா, நவசமசமாஜக் கட்சித் தலைவர் வாசுதேவநாணயக்காரா ஆகியோரையும் சந்தித்துப் பேசினார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# வர்த்தக வங்கியில் பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வர்த்தக வங்கிக் கிளையில் பொதுமக்களும், வாடிக்கையாளரும் அங்குள்ள வங்கி பாதுகாப்பு ஊழியர்களால் சோதனைக்குட்படுத்தப்படுகின்றனர்.

இந்திய இராணுவம் இங்கு இருந்தபோது நகரிலுள்ள

(6ம் பக்கம் பார்க்க)

# தேசியஇளைஞர் சேவை மன்றம் சுயதொழில் கடன் வழங்குகிறது

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அம்பாறை மாவட்டப் பிரிவு மேற்படி கழக அங்கத்தவர்களுக்கு சுயதொழில் வாய்ப்புக் கடன்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதற்கென ஆறுஇலட்சத்து 72 ஆயிரம் ரூபா நிதி அரசினால் வழங்கப்படுமென அம்பாறை மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றப் பொது முகாமையாளர் திரு. ஜி. டி. ஆர். ரஞ்சித் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

நிஸ்கோ கழகங்களில் அங்கம் வகிக்கின்ற இளைஞர், யுவதிகள் விவசாயம் மிருக பறவை வளர்ப்பு, சிறுகைத் தொழில், பாலர்பாடசாலை, வர்த்தகம், கரும்புச்செய்கை போன்ற சிறு தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்ாக இக் கடன்கள் வழங்கப்படுகின்றது.

மேற்படிசுயதொழில்வாய்ப்புக் கடன்களைப் பெற விரும்புபவர்கள் தாம் தெரிவு செய்யும் தொழிலில் நல்ல பயிற்சி பெற்றிருத்தல் அவசியமானதாகும். பயிற்சி இல்லாத இளைஞர் யுவதிகளுக்கு விரும்பும் தொழில்களில் நல்ல பயிற்சி அளிக்கப்பட்ட பின்னரே மேற்படி சுயதொழில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# எல்லைக் கிராம கெகிலியா மடுவில் தமிழரை மீளக் குடியமர்த்த முயற்சி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அம்பாறை எல்லையில் உள்ள கெகிலியா மடு தமிழ்கிராமத்துக்கு மட்டக்களப்பு அரசாங்க அதிபர் உயர் அதிகாரிகள், விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி பிரதித்தலைவர் திரு. எஸ். கரிகாலன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்,

இங்கு வாழ்ந்த சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட தமிழ்க் குடும்பங்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாகவே இவர்கள் இங்கு சென்றனர்

இங்கே தற்போது இலங்கைஇராணுவ முகாம், பொலிஸ் நிலையம் என்பன நிறுவப்பட்டுள்ளன.

ஐம்பத்தைந்து வீடுகளைக் கொண்ட சிங்களக்குடியேற்றமும் இடம் பெற்றுள்ளதோடு ஊர்காவல்படையின் இந்த வீடமைப்பில் இருக்கின்றனர்.

அத்துடன் சிங்களப் பாடசாலையும் உருவாகியுள்ளது. இங்குள்ள தமிழ்ப்பாடசாலையில் இராணுவம் குடிகொண்டுள்ளது.

இவற்றைக் கொண்டு தாம் மீளக்குடியமர்ந்து இருக்க

(6 ஆம் பக்கம் பார்க்க)

மன்னார் - சங்குப்பிட்டி

# வீதியின் சீர்கேட்டால் பிரயாணிகள் பெரும் அவதி

(மன்னார்)

மன்னார் யாழ்ப்பாண பயணிகள் சங்குப்பிட்டி-மன்னார் வீதியின் அவல நிலையால் துரிதமாக தமது பயணத்தைத் தொடர முடியாத நிலையில் உள்ளனர்.

பூநகரி நாலாம் கட்டையிலிருந்து மன்னார் நகரம் வரையிலான வீதியில் ஒரே பள்ளங்களும் மேடுமாக காட்சி தருகிறது.

சில பகுதிகளில் ஆமைவேகத்தில் திருத்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன

நாயாற்றுவெளி, பல்லவரா

(6ம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

சீயாக்காய், அரிசி, பயறு வெந்தயம் ஆகிய நான்கு வகைப் பொருட்கள் அடங்கிய சீயாக்காய் பவுடர் எங்களிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் MGM.NO. 777 K. K. S. ROAD, JAFFNA. (B/ 764)

யாழ் நகரில் சகலவிதமான மணிக்கூடுகளையும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள DILKA WATCH SORKS, Opposite Bus 'and, Jaffna (குறிப்பு) சகல சீக்கோ' சிற்றிசன் உதிரிப்பாகங்களும் கையிருப்பில் உண்டு.

# "பன்னிரெண்டுவயதுச்சிறுவனுக்கு முற்றவெளி புதிது" - புதுவை இரத்தினதுரை

ஈழத்தில் தற்போதுள்ள கணிசமான சிறுவர்களுக்கு இன்றுதான் முற்றவெளி அறிமுகமாகிறது. 12 வருடகாலத்தின் பின்னர் இன்றுதான் நாம் இங்கு கூடியுள்ளோம். ஆகவே அன்று பிறந்திருந்த ஒரு புதிய சமுதாயத்திற்கு இன்றுதான் இந்த மைதானம் அறிமுகமாகிறது.

இவ்வாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி கலை கலாசார பிரிவு பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை நேற்று முன்தினம் முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற தேனிசை நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசுகையில் கூறினார்.

சுமார் பன்னிரண்டு வருட காலத்திற்குப் பின்னர் யாழ்ப்பாணம் முற்றவெளியில் இவ்வாறான கலாசார நிகழ்ச்சியை விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் கலாசாரப் பிரிவுஏற்பாடு செய்திருந்தது. இங்கு குறிப்பிடத்தக்கது. மிகவும் சிறப்பான முறையில் இதனை அவர்கள் ஒழுங்கு செய்திருந்தனர்.

கவிஞர் காசி ஆனந்தன் இங்கு உரையாற்றும் போது தேனிசை செல்லப்பா அவர்கள் முப்பது ஆண்டுகளுக்கு முன் பாடியவை இன்று உண்மையாகிவிட்டது.

தமிழகத்தில் தம்மை விடுதலை வீரர்கள் என்று கூறிக் கொண்டு சில தலைவர்கள் ஒரு காலத்தில் தங்கியிருந்த போது ஈழப்போராட்டத்தை அவர்களுக்கு எடுத்துக்கூறி களத்திற்குச் சென்று திரு. செல்லப்பா பாடினார்.

தேனிசை செல்லப்பாவின் பாடல்கள் தற்போது உலகின் பல பாகங்களிலும் ஒலித்த வண்ணம் உள்ளன என்றார்.

யாழ் மாவட்ட மகளிர் கலாசார பிரிவு பொறுப்பாளர் செல்வி சீத்தா தமது உரையின் போது எமது நாடி நரம்புகளையும் எமது இரத்தத்தையும் கொதிப்படையச் செய்யும் வகையில் தேனிசைச் செல்லப்பா பாடல்களை வழங்கியுள்ளார்.

இவரது பாடல்கள் மூலம் எமது போராட்டம் ஆயுதங்களால் மட்டும் முன்னெடுத்துச் செல்லப்பட முடியாது. எமது கலைகலாசாரங்கள் மூலமாகவும் எடுத்துச் செல்லப்படவேண்டும் என்பது வெளிப்படையாகி உள்ளது. என்றார்

தலைமை தாங்கிப்பேசிய அரசியல் பொறுப்பாளர் திரு. ஸ்ரான்லி டொமினிக் பேசும் போது எமது போராளிகள் உணர்ச்சிக்கேற்ற வகையில் எழுச்சிப் பாடல்களை திரு. தேனிசை செல்லப்பா பாடியுள்ளார் இதை பல சந்தர்ப்பங்களில் நாம் யதார்த்தமாக கண்டுள்ளோம்.

இறுதியாக விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி யாழ். மாவட்ட அமைப்பாளர் திரு. ராஜன் கூட்டத்தில் பங்குபற்றிய, ஒத்துழைத்த சகலருக்கும் நன்றி கூறினார்.

யாழ். கோட்டை முற்றவெளி மைதானத்தில் இடம்பெற்ற தேனிசைச் செல்லப்பாவின் இந்த இசை நிகழ்ச்சி இரவு பத்தரை மணியளவில் முடிவடைந்தது. இலட்சக்கணக்கான மக்கள் கூடியிருந்த இந்த நிகழ்ச்சியின் முடிவில் இசைக்கலைஞர் தேனிசைச் செல்லப்பா விழாவிற்கு வந்திருந்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் போது கண்ணீர் மல்கிக் காணப்பட்டார்.

# கல்வி அபிவிருத்திக்கு கி. மு.சங்கம் நடவடிக்கை

(கோண்டாவில்)

இப்பகுதி மாணவர்களின் கல்வியை அபிவிருத்தி அடைய செய்யும் வகையில் கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்றசங்கம் பல முன்னணி நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது.

இதன் முதல் நடவடிக்கை கல்வி அமைச்சின் பாடத்திட்டத்திற்கமைய சகல வகுப்பு மாணவர்களுக்கும் மாலை நேர வகுப்புக்கள் ஆரம்பிக்கப் உள்ளது.

கல்விக் கருத்தரங்குகள் உட்பட மாணவர்களுக்கிடையே போட்டிப் பரீட்சைகளும் நடத்தப்பட உள்ளன.

இப்பகுதியில் ஏறக்குறைய இருநூறு மாணவர்கள் தமது ஆரம்பக்கல்வியையே சரியான முறையில் பெருத்த அவல நிலை நிலவுவது குறிப்பிடத்தக்கது.

# கோழிக்கு கிராக்கி

(காத்தான்குடி)

காத்தான்குடியில் கோழியின் விலை எக்கச்சக்கமாக உயர்ந்துவிட்டது நோன்புப் பெருநாளை முன்னிட்டு முஸ்லிம்கள் பலரும் கோழிகளை வாங்க இப்போதே ஆர்வங் காட்டி வருவதால், வியாபாரிகளும் கோழிகளுக்கு ஆனை விலை குதிரை விலை கூறுகின்றனர்.

காத்தான்குடி சந்தைகளுக்கு வெளியூர் கோழி வியாபாரிகளும் நாளாந்தம் அதிகமாக வருகை தந்து சம்பாதிக்கத் தொடங்கியுள்ளனர்.

யாழ்நகரில் இன்றைய சினிமா

வின்ஸர்-யாழ்
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
இது நம்ம ஆளு
(புதிய வெளியீடு)

நியூ சாந்தி (யாழ்)
தினசரி 4.00, 6.45, 9.30
ஜெயசங்கர், முத்துராமன் லட்சுமி, நாகேஸ் நடித்த
கண்ணன் வருவான்
(புதிய பிரதி)

மனோகரா - (யாழ்
தினசரி 4.00, 6.45, 9.45
ஜெய்சங்கர் ராஜஸ்ரீ நிர்மலா நாகேஸ் நடித்த
நீதிதேவன்
புதிய பிரதி

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
105 நாள் வெற்றிநடை போடுகிறது
ராஜாதி ராஜா
(கலர்)

விளம்பரம் செய்க வியாபாரம் பெருக

# சுவாமியார் வீதி மக்கள் குடிநீருக்காக அலைகின்றனர்

(ஈச்சமோட்டை)

கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் உள்ள ஏழு குடிநீர் குழாய்களிலிருந்து குடிநீர் வராததால் இப்பகுதி மக்கள் தூர இடங்களிலிருந்து குடிநீரைக் கொண்டு வருகின்றனர்.

இதே சமயம் இங்குள்ள சில பைப்புகளில் அதன் இயக்கும் பகுதி பழுதடைந்திருப்பதால் தண்ணீர் வீணாக வெளியேறிக் கொண்டிருக்கிறது.

இந்தக் குடி நீர்ப்பிரச்சினை தொடர்பாக யாழ். மாநகர சபைக்கு மகஜர் மூலமாகவும் நேரடியாகவும் அறிவித்தும் இதுவரை எதுவித நடவடிக்கைகளும்எடுக்கப்படவில்லை.

# கூட்டுறவுசங்கக்கடைகளில் மல்லிக்கு தட்டுப்பாடு

(கோண்டாவில்)

கூட்டுறவுச்சங்கக் கடைகளில் மல்லிக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் மல்லியை கொள்வனவு செய்யாமையினாலேயே இத்தட்டுப்பாட்டு நிலைமை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இதே வேளை தனியார் கடைகளில் தரமான மல்லி ஒரு கிலோ 42 ரூபாவிலிருந்து 45 ரூபா வரை விற்பனை செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

தனியார் துறையினரிடமிருந்து தரமான மல்லியைக் கொள்வனவு செய்து பாவனையாளர்களுக்கு குறைந்த விலையில் வழங்குவதற்கு முடியாத நிலையில் உள்ளதாக கூட்டுறவுச் சங்கங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

உணவு இலாகாவினால் மொத்த மல்லி விற்பனைவரி அறவிடப்படுவதால் தனியார் துறையினருடன் போட்டி பாட்டு பாவனையாளர்கட்கு பொருட்களை வழங்க முடியாத நிலைமை தமக்கு ஏற்பட்டுள்ளதாக கூட்டுறவு சங்க வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன. (34)

# விற்பனை வரி பாக்கி செலுத்தப்பட வில்லை

(காத்தான்குடி)

காத்தான்குடி ப நோ. கூ. சங்கம் 1984ம் ஆண்டிலிருந்து விற்பனை வரி செலுத்தாமல் இரு கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. வந்துள்ளது ஏறத்தாழ 2,40,000/- ரூபா பாக்கித் தொகைப் பணத்தை உடனடியாகவங்கிக் கணக்கின் ஊடாக வசூலிக்கநடவடிக்கை எடுக்கப்பட்டது.

நிர்வாக சபையினர் நிலைமையைத் தெளிவுபடுத்தி கால அவகாசம் கோரியதையடுத்து ஒரு லட்சரூபா சங்கக் கணக்கில் இருந்து திறை சேரிக்கை வழங்கப்பட்டது.

இதனால் சங்கத்தின் மூலதனத்தில் பலவீனம்ஏற்பட்டுள்ளது. இத்தகவலை சங்க இயக்குணர்சபை உறுப்பினர் ஜனாப் எம். எச். எம். இபுறாஹீம் ஜே.பி ஈழநாதத்துக்கு தெரிவித்தார். (55)

மன்னார் - யாழ்ப்பாணம்

# கேரதீவு - சங்குப்பிட்டி துறையில் குடிநீர் இன்றி பயணிகள் அவதி

(ஈச்சமோட்டை)

கேரதீவு - சங்குப்பிட்டி இறங்குதுறையில் குடிதண்ணீர் போதியளவு இன்றி மன்னார்– யாழ்ப்பாணம் பயணிகள் பெரும் அவதிப்படுகின்றனர்.

இந்த துறையில் சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என பயணிகள் தெரிவிக்கின்றனர்.

சங்குப்பிட்டி – கேரதீவு கடலில் பாதைச்சேவை ஆரம்பிக்கப்பட்டதால் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து மன்னார் மாவட்டத்துக்குச் செல்லும் மக்களின் தொகையும் அதிகரித்து வருவதால் பணத்திற்காவது தண்ணீர் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என பொதுமக்கள் கேட்கின்றனர்.

தற்போது வெய்யில் காலமானதால் இந்த துறையில் பயணிகள் இடம்மாறும்போப் தண்ணீர் வசதியின்றி அவதிது படுவதை தினமும் காணமுடிகிறது.

திருக்கேதீஸ்வரம், மடு போன்ற திருத்தலங்களுக்கும் தற்போது பக்தர்கள் அதிகமாக செல்வதால் சமய நிறுவனங்களும் இதில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் பொதுமக்கள் கேட்கின்றனர்.

சில தினங்களுக்கு முன்னர் இங்கு ஒரு பயணி மயங்கி விழுந்தபோது தண்ணீர்கேட்டு இறுதியில் கடல் தண்ணீர் வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (43)

# மட்டக்களப்பு வீதிகளில் மீண்டும் பொலிஸார் பணி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் பொலிஸாரின் வெளி நடமாட்டத்திற்கு தமிழீழவிடுதலைப்புலிகளால் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து கடந்த திங்கட்கிழமை முதல் பொலிஸார் வீதிபோக்கு வரத்து கண்காணிப்பு அலுவல்களில் ஈடுபடத் தொடங்கியுள்ளார்.

இக் கடமைகளில் தமிழ்பேசும் பொலிஸார் ஈடுபட்டுள்ளதும்.குறிப்பிடத்தக்கது (37)

# ஆணையாளர் கீரிமலைக்கு விஜயம்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலாலா தமது

# கைத்தறி துறையாளர் சங்கம் காத்தான்குடியில் அமையும்

(காத்தான்குடி)

காத்தான்குடிப் பிரதேச கைத்தறித்துறையாளர்களை

தான்குடி முக்கியத்துவம் பெறும் ஒரு பட்டினமாகும் 1979ஆம் ஆண்டு வீசிய சூறாவளியின் காரணமாக இங்கு

# கால்நடைகளுக்கு எச்சரிக்கை

(கோண்டாவில்)

கால்நடை வளர்ப்போர்

## செலுத்தப்பட வில்லை

(காத்தான்குடி)

காத்தான்குடி ப நோ. கூ. சங்கம் 1984ம் ஆண்டிலிருந்து விற்பனை வரி செலுத்தாமல் இரு கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. வந்துள்ளது ஏறத்தாழ 2,40,000/- ரூபா பாக்கித் தொகைப் பணத்தை உடனடியாகவங்கிக் கணக்கின் ஊடாக வசூலிக்கநடவடிக்கை எடுக்கப்பட்டது.

நிர்வாக சபையினர் நிலைமையைத் தெளிவுபடுத்தி கால அவகாசம் கோரியதை யடுத்து ஒரு லட்சரூபா சங்கக் கணக்கில் இருந்து திறை சேரிக்கை வழங்கப்பட்டது.

இதனால் சங்கத்தின் மூலதனத்தில் பலவீனம்ஏற்பட்டுள்ளது. இத்தகவலை சங்க இயக்குனர்சபை உறுப்பினர்ஜனாப் எம். எச். எம். இபுறாஹீம் ஜே.பி ஈழநாதத்துக்கு தெரிவித்தார். (55)

# கேரதீவு - சங்குப்பிட்டி துறையில் குடிநீர் இன்றி பயணிகள் அவதி

(ஈச்சமோட்டை)

கேரதீவு - சங்குப்பிட்டி இறங்குதுறையில் குடிதண்ணீர் போதியளவு இன்றி மன்னார்-யாழ்ப்பாணம் பயணிகள் பெரும் அவதிப்படுகின்றனர்.

இந்த துறையில் சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என பயணிகள் தெரிவிக்கின்றனர்.

சங்குப்பிட்டி-கேரதீவு கடலில் பாதைச்சேவை ஆரம்பிக்கப்பட்டதால் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து மன்னார் மாவட்டத்துக்குச் செல்லும் மக்களின் தொகையும் அதிகரித்து வருவதால் பணத்திற்காவது தண்ணீர் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என பொதுமக்கள் கேட்கின்றனர்.

தற்போது வெய்யில் காலமானதால் இந்த துறையில் பயணிகள் இடம்மாறும்போப் தண்ணீர் வசதியின்றி அவதிது படுவதை தினமும் காணமுடிகிறது.

திருக்கேதீஸ்வரம், மடு போன்ற திருத்தலங்களுக்கும் தற்போது பக்தர்கள் அதிகமாக செல்வதால் சமய நிறுவனங்களும் இதில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் பொதுமக்கள் கேட்கின்றனர்.

சில தினங்களுக்கு முன்னர் இங்கு ஒரு பயணி மயங்கி விழுந்தபோது தண்ணீர்கேட்டு இறுதியில் கடல் தண்ணீர் வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (43)

அறவிடப்படுவதால் தனியார் துறையினருடன் போட்டி பாட்டு பாவனையாளர்கட்கு பொருட்களை வழங்க முடியாத நிலைமை தமக்கு ஏற்பட்டுள்ளதாக கூட்டுறவு சங்க வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன. (34)


விளம்பரம் செய்க
வியாபாரம் பெருக


## ஆணையாளர் கீரிமலைக்கு விஜயம்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலாலா தமது அலுவலக அதிகாரிகள் சகிதம் கடந்த வெள்ளிக்கிழமை கீரிமலைக்கு விஜயம் செய்தார்.

கீரிமலையில் மேற்கொள்ள இருக்கும் அபிவிருத்தி வேலைகளை நேரில் பார்வையிட்டுச் செயல்படுத்தும் நோக்குடனே ஆணையாளர் இங்கு வந்தார்.

இராணுவ நடவடிக்கைகளால் இந்தப் பகுதி பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# கைத்தறி துறையாளர் சங்கம் காத்தான்குடியில் அமையும்

(காத்தான்குடி)

காத்தான்குடிப் பிரதேச கைத்தறித்துறையாளர்களை ஒன்றிணைத்து ஒரே நிர்வாக அமைப்பின் கீழ் செயற்படுவதற்கான ஏற்பாடுகள் தற்போது துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்தகைய ஓர் அமைப்பை ஏற்படுத்தும் நோக்குடன் காத்தான்குடி 6ஆம் குறிச்சி தீவின் வீதியில் அமைந்துள்ள அமீரலி வீவிங்ஸ் வளவில் அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெறவுள்ளது.

கைத்தறித் துறையில் கிழக்கு மாகாணத்தில் காத்தான்குடி முக்கியத்துவம் பெறும் ஒரு பட்டினமாகும் 1979ஆம் ஆண்டு வீசிய சூறாவளியின் காரணமாக இங்கு கைத்தறித்துறைஊக்கமிழந்து போனது. செயற்பட்டுக் கொண்டிருந்த ஓரிரு சங்க அமைப்புக்களும் செயலிழந்து போயின இதனால் போதிய முன்னேற்றமடையாத நிலையில் கைத்தறித்துறை கடந்த 10 ஆண்டுகளாக இருந்து வருகிறது.

இப்பிரதேச கைத்தறித் துறையாளர்களை ஒன்றிணைக்கும் போது எதிர்காலத்தில் கைத்தறித்துறை கூடியளவு அபிவிருத்தியடைய வழியேற்படும் என்றும், இத்துறைசார்ந்த சகலதரப்பினரும் தம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உருவாக்கப்படுகின்ற சங்க அமைப்பு பாடுபடும் என்றும் கூட்டத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து வரும் ஜனாப் கே. எம். எம் சித்தீக் தெரிவித்தார். (55)

## மட்டக்களப்பு வீதிகளில் மீண்டும் பொலிஸார் பணி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் பொலிஸாரின் வெளி நடமாட்டத்திற்கு தமிழீழவிடுதலைப்புலிகளால் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து கடந்த திங்கட்கிழமை முதல் பொலிஸார் வீதிபேரக்கு வரத்து கண்காணிப்பு அலுவல்களில் ஈடுபடத் தொடங்கியுள்ளார்.

இக் கடமைகளில் தமிழ்பேசும் பொலிஸார் ஈடுபட்டுள்ளதும்.குறிப்பிடத்தக்கது (37)

## இந்து கலாசார அமைச்சின் நிதியில்லை

# ஸ்ரீ முருகன் ஆலயத்தில் கட்டட வேலைகள் நிறுத்தம்

(அட்டாளைச்சேனை)

அக்கரைப்பற்று "ஆலையடி வேம்பு" என்னுமிடத்தில் அக்கிராமவாசிகளினால் நிர்மாணிக்கப்பட்டு வரும் ஸ்ரீ முருகன் ஆலயம் இது காலவரைக்கும் முற்றுப் பெறாத நிலையில் உள்ளது

அரைகுறையாகவுள்ள இவ்வாலயத்தை அப்பகுதிவாழ் ஏழைமக்கள் மிகவும் கஷ்டப்பட்டு நிர்மாணித்துள்ளதாகவும் இதன் நிலைமை குறித்து அம்பாறை மாவட்ட தமிழ் பாராளுமன்ற உறுப்பினரைப் பலமுறை வேண்டிக்கொண்டதோடும், இந்துக் கலாச்சார அமைச்சருக்கும் இதுபற்றி விபரமாக மகஜர் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டது. தற்போது தங்களிடம் பணம் இல்லையென்றும், இந்துசமய கலாச்சாரங்களைப் பிரதிபலிக்கும் சிறந்த நூல்கள் சில மிக விரைவில் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று அமைச்சரின் பதில் தந்தது.

ஆனால் இதுவரைக்கும் அப்புத்தகங்களாவது வந்து சேரவில்லை, பணமும் கிடைப்பதற்கான சாத்தியக் கூறுகளும் இல்லை. ஆகவே இதற்கு தகுந்த அதிகாரிகள் கவனத்திற்கொண்டு இவ்வாலயத்தைக் கட்டி முடிக்க ஆவன செய்யுமாறு இவ்வாலயத்தின் பரிபாலன சபையின் பிரதம செயலாளர் திரு. கே. கோபாலசிங்கம் கேட்டுள்ளார். (46)

## வரட்சியால் கோழி நோய்

(கோண்டாவில்)

கடுமையான வரட்சி நிலைமையின் நிமித்தம் இப்பகுதி கோழிகள் நோயால் பீடிக்கப்பட்டுள்ளன. இந்த வரட்சி நிலைமை தொடருமாகில் கோழிகள் யாவும் இறக்கும் நிலை ஏற்படலாம் என்று கோழி வளர்ப்பாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கால் நடைகளும் நோய் பாதிப்புக்குஉள்ளாக்கப் பட்டுள்ளமைகுறிப்பிடத்தக்கது. (34)

## கால்நடைகளுக்கு எச்சரிக்கை

(கோண்டாவில்)

கால்நடை வளர்ப்போர் தமது மாடுகளை கட்டாக்காலியாக திரிய விடவேண்டாமென்று கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்ற சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

விவசாயப் பிரதேசமான இப்பகுதியில் இக்கட்டாக்காலி மாடுகள் பயிர்களை அழித்து வருவதினாலேயே மேற்படி சங்கம் இவ்வேண்டுகோளை விடுத்துள்ளதுடன், கட்டாக்காலிகளை பிடிப்பதற்காக இருவரை நியமனம் செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (34)


புதிய உயர் கல்லூரி ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

SPOKEN ENGLISH
WITH GRAMMER
by:- BRITTO

புதிய பிரிவு ஆரம்பம்: 28-4-1990
(9-00 — 1-00)

(B-818)



"இறப்பிலும் உன்
பிறப்பை மறவோம்"
25-04-1990



பொன் சால்ஸ்
சிறீதரன்
(கஜன்)

"சீரியதொரு பந்தையத்தில் ஓடினேன். ஓட்டத்தை முடித்துவிட்டேன். நல்வாழ்வின் பரிசாக வெற்றிவாகை எனக்காக காத்திருக்கிறது"

மனைவி தமயந்தி
மகன் விக்ரர் புருஷோத்மன்

மின்சார நிலைய வீதி,
சுன்னாகம்.

(R.431)


# அமரர் கந்தர் வேலுப்பிள்ளை ஞாபகார்த்த நிதி

(விசேட நிருபர்)

"சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம் ஓர் சிறந்த சேவையாளனை இழந்து விட்டது. அந்த இழப்பையும், அவரது சேவைகளையும் நினைவூட்டும் முகமாக அவரது புதல்வன் ஞாபகார்த்த புலமைப் பரிசில் நிதியை வழங்கியுள்ளமைக்காக சமாசம் பெருமை அடைகிறது."

யாழ். வண்ணை நாச்சிமார் கோவிலடி அமரர் கந்தர் வேலுப்பிள்ளை ஞாபகார்த்த கல்விநிதி வழங்கும் வைபவத்தில் கலந்து பேசுகையில் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தலைவர்திரு. ந. தங்கவடிவேல் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ். நாச்சிமார் கோவிலடி சுடரொளி சமூகமுன்னேற்றக்கழகம் சார்பாக திரு வே. ஈஸ்வரன் ரூபா பதினைந்தாயிரத்தை சமாசக் கல்வி நிதியத்திற்கு வழங்கினார்.

சுடரொளி சனசமூக நிலைய...த் தலைவர் திரு. அ. ஞானப்பிரகாசபாஸ் தலைமையில் வைபவம் நடைபெற்றது.

மில்க்வைற் அதிபர் திரு. க. கனகரராஜா, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை சிரேஷ்ட முகாமையாளர் திரு. ஆர். எம். நாகலிங்கம் ஆகியோரும் கருத்துரை வழங்கினர்.

திரு. க. மாயாதிரவியம் நன்றியுரை செய்தார். (21)

## மக்கள் முன்னணி மட்டக்களப்பில் மே தினம்

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினால்மட்டக்களப்பிலும் மேதின விழா நடைபெறவிருப்பதாக முன்னணிப் பிரதித் தலைவர் எஸ். கரிகாலன் தெரிவித்தார்.

அன்றைய தினம் ஊர்வலமும், பொதுக் கூட்டமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## தாய்லாந்துக்குப் பனை ஓலை ஏற்றுமதி

(கரவெட்டி)

பனை அபிவிருத்திச் சபை பனை ஓலைச் சார்வுகளையும், சாயமிடப்பட்ட ஓலைச் சார்வுகளையும் தாய்லாந்துக்குஏற்றுமதி செய்யவுள்ளது.

தாய்லாந்துப் பெண்கள் அகன்ற தொப்பிகளை அணிந்திருப்பதுவழக்கம். பனைஓலையினால்செய்யப்பட்ட தொப்பிகள் அங்கு அறிமுகமாகியபின் பனையோலைச் சார்வுகளுக்கு தாய்லாந்தில் அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது,

பனை ஓலைச் சார்வைக் கொண்டு அவர்களே தொப்பிகளையும், கூடைகளையும் இழைக்கக உள்ளார்களாம்.


SHABRA TROPHY

Calling all Cricket Loving Clubs in the Norherov Prinnce for their

4th ANNUAL LIMITED OVERS CRICKET TOURNAMENT for

THE SHABRA TROPHY
organised by
Jolly Stars Sports Club
Sponsored by
SHABRA
UNICO FINANCE LTD.

Entries close at 6 p. m. on Friday 4th May 1990.
Draw at 9 a. m. on Sunday 6th May 1990.
Pleace collect your entry forms & Tournament rules from

Shabra Unico Finance Ltd.
207, Power House Road,
JAFFNA.

Capt. N. Somasundaram
45. College Road,
JAFFNA.

B.822

# நேபாளத்தில் மீண்டும் வன்முறை

# பொலிஸார் சூட்டதில் ; 4 பேர் பலி

(காட்மண்டு)

நேபாளத்தில் மீண்டும் வன்முறை சம்பவங்கள்இடம் பெற்றுள்ளது. இம் வன்முறைச் சம்பவங்களை அடுத்து காட்மண்டுவில் பத்து மணிநேர ஊடங்குச் சட்டம் அமுல் படுத்தப் பட்டுள்ளது. இக் கலவரங்களில் பத்து பேர் இறந்துள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர்.

இக் கலவரமானது பழைய பஞ்சாயத்து ஆட்சியைஆதரிக்கும ஆதரவாளர்களினால் ஏற்படுத்தப்பட்டதாக கூறப் படுகிறது. இவர்கள் பல கட்சி ஜனநாயக முறையைக் கொண்ட இடைக்கால அரசு நிறுவப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸ் சீருடைகள் அணிந்து மக்களிடையே பல குழப்பங்களையும் கொள்ளை அடிப்பு சம்பவங்களையும் ஏற்படுத்தினர்கள்.

இதனால் கோபமடைந்த பொது மக்கள் கலகத்தில் ஈடுபட்டார்கள். கலகத்தை அடக்க பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் நான்கு பேர் வரை கொல்லப்பட்டனர்.

வன் முறை சம்பவங்கள் நடைபெற்ற இடங்களை நேபாள உள்துறை அமைச்சர் நேரில் சென்று பார்வையிட்டார். அச் சமயம் பொது மக்கள் பொலிஸ் தலைமை அதிகாரிகளை உடனடியாக பதவி நீக்கம் செய்ய வேண்டுமென கூறினர்கள்.

பிரதம மந்திரி கிருஷ்ணபிரசாத் பட்டாராய்மன்னர் பிரேந்திராவுடன் இக் கலவரம் குறித்து கலந்துரையாடலை மேற்கொண்டிருக்கிறார்.

அதேவேளை பிரதம மந்திரி அரசியல் சாசனத்தை தயாரிப்பதும் தேர்தலை இயன்றளவு விரைவாக நடத்துவதும் தமது அரசின் பொறுப்பாகும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்

மேலும் அவர் குறிப்பிடுகையில் பல கட்சி ஆட்சியை ஆதரிசத இயக்கத்தில் கண்டனத்திற்குரிய வகையில் குற்றம் புரிந்தவர்கள் மீது தமது அரசு நடவடிக்கை எடுக்கத் தயாங்காது என்றும் தெரிவித்தார்.

கலவரம் குறித்து கருத்து வெளியிட்ட பிரதமர் முப்பது ஆண்டு காலம் அதிகாரத்தை ஆண்ட பிற்போக்கு சக்திகள் மீண்டும் பதவிக்கு வரும் ஒரு முயற்சியில் இவ்வாறு நடந்து கிறது என்றும இது பற்றி மக்களை எச்சரிக்கையாக இருக்கும் படியும் கூறினார்

## உணவுப் பொருளில் கலப்படம்

காத்தான்குடி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் கலப்படத் தொழில் குடிசைக் கைத் தொழிலாக நடை பெற்று வருகிறது.

வடகில் இவ்வாறான கலப்படம் பரவலாக நடைபெறுவது போல் கிழக்கிலும் அவ்வாறான கலப் படம் குடிசைத் தொழிலாக மேற் கொள்ளப் பட்டு வருகிறது.

காத்தான்குடியில் தேன் நெய் போன்ற அத்தியாவசியஉணவு மருந்துகளின் அதிகளவு கலப் படம் செய்யப்படுகிறது :கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

# இன்று தொடங்கும் இரண்டாம்

# ஒஸ்ரல் - ஏசியா கிண்ணக் கிரிக்கெட்

கடந்த சில வருடங்களாக சார்ஜா என்ற பெயர் கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் மிகவும் பிரபல்யமானதாகும். 1981 இல் இருந்து வருடம் தவறாது இங்கு நடைபெற்று வரும் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பையும் வரவேற்பையும் பெற்றுள்ளது. சார்ஜா போட்டிகள் ஒரு சில நோக்கங்களைக் கொண்டது. சிறந்த கிரிக்கெட் வீரர்களுக்கு பெரும் பணப் பரிசைக் கொடுப்பது அதில் ஒன்றாகும். இதனாலேயே இப்போட்டிகள் C. B. F. S. என்று அழைக்கப்படுகின்றன. (கிரிக்கெட் வீரர் நலன்புரி நிதியத் தொடர்)

இந்த கிரிக்கெட் நிறுவனத்தை ஆரம்பித்து நடாத்திவருபவர் கிரிக்கெட்மீது பெரும் ஆர்வம் கொண்ட அப் [illegible]

இவர்கள் 1986 இல் நடைபெற்ற முதல் ஒஸ்ட்ரலேசியாக் கிண்ணத்தைச் சுவீகரித்தவர்கள். இப்முறையும் இம்ரான்கானின் தலைமையில் சிறந்ததொரு அணி செல்கின்றது. ரமீஸ்ராஜா அணியில் இம்முறை இல்லை என்பது அவதானிக்கத்தக்கது. இதே வேளை மன்சூர் ராணா, சஜாட்அக்பர் ஆகிய இரண்டு புதுமுகங்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள். ஏனைய வீரர்கள் ரசிகர்கள் நன்கு அறிந்த மிகத்திறமையான அணியின் நிரந்தர வீரர்களே 1986 இறுதியாட்டத்தில் சேட்டன்சர்மாவின் இறுதி ஓவரில் எஞ்சியிருந்த மூன்று விக்கெட்டுகளின இரண்டை அவர் வீழ்த்த மிக நெருக்கடியான நிலையில் இறுதிப பந்தில் நான்கு ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் அந்தப் பந்தை மியன்டாட் அற்புதமாகச் சிக் [illegible]

டங்களில் இலங்கையை எதிரணி எதுவும் சுலபமாகக் கருதி விடுவதில்லை. குறிப்பாக இலங்கையின் பீல்டிஸ் மிகச் சிறப்பானது. நேராகப் ஆட்டங்களின் போது மேற்கு இந்திய அணியைத் தோற்கடிததமையும் இந்தியாவையும் பாகிஸ்தானையும் இறுதி நிமிடம் வரை தடுமாறவைத்ததையும் யாரும் மறந்துவிட இயலாது அரவிந்த டீசில்வா அஸங்க குருசிங்க, அர்ஜுன ரணதுங்கஹஸான் திலகரத்ன அதுல சமர சேகர போன்றோர் சிறந்த துடுப்பாட்ட வீரர்கள் எதிரணிகள் இவர்கள் மீது மிக அக்கறையாகவே இருக்கும் பந்துவீச்சாளரில் ஒரு நாள் ஆட்டங்களில் மிகச் சிறப்பாக பந்து வீசக் கூடியவர் என்ற பெயரை றொமேஷ்ரட்ணாயக்கா தட்டிக் கொண்டவர் அவருடன் இணைந்து ரவி ரத்னாயச்கா [illegible]

பாகிஸ்தானைப் போலவே போர்க்குணம் கொண்டதொரு அணி இது. எதிரணியின் சிறு பிழைகளை தனது வெற்றியாக மாற்றுவதில் அலம்போடர் மிகக் கெட்டிக்காரர் சிறப்பாக மிகக் கட்டுக்கோப்புடன் வளர்த்தெடுக்கப் பட்டதொரு அணி அவுஸ்திரேலிய அணி இறுதி ஆட்டத்துக்கு இவர்கள் வராது போனால் அது ஆச்சரியமானதாகவே இருக்கும்.

நியூசிலந்து அணியும் குறைத்து மதிப்பிட முடியாததொன்று, ஆனால் றிச்சட் ஹட்லி இப் போட்டிகளில் பங்குகொள்ள இயலாமல் இருப்பது நியூசிலந்துக்கு பாரிய இழப்பாகும். இருந்தும் டனி மொரிஸன் எனும் இளைஞர் லேசுப்பட்டவரல்ல, அவுஸ்திரேலிய இந்திய அணிகளைத் திக்குமுக்காடச் செய்தவர் இவர் அணித்தலைவர் ஜோண் [illegible]

### நமீபியா ஐ. நாவில்

(நியூயோர்க்)

நமீபியா, ஐக்கிய நாடுகள் சபையின் 160 ஆவது உறுப்பு நாடாக சேர்த்து கொள்ளப் பட்டிருக்கிறது.

இத்தகவலை ஐ. நா சபையின தலைமைக் காரியாலயம் அறிவித்துள்ளது.

அண்மையில் சுதந்திரம் பெற்ற நமீபியா இபபோ ஐ. நா சபையில் 160 வது உறுப்பு நாடாக சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

# உணவு இலாக நிறுவனம் பணம் செலுத்துவதில் அசமந்தம்

(கோண்டாவில்)

உணவு இலாகா பகுதியினர் தமக்கு கொடுக்க வேண்டிய நிலுவைப்பணமான ஐம்பதாயிரம் ரூபாவை வழங்குவதில் தொடர்ந்து அசமந்தப் போக்கையே கையாண்டு வருவதாக நல்லூர் பலநோக்கு கூட்டுறவு சங்கத் தலைவர் திரு. கனகசபாபதி குற்றம் சாட்டியுள்ளார்.

கடந்த கால நெருக்கடி நிலமைகளின் போது கூட்டுறவு சங்கங்கள் மாவை பெறுவதற்கான விலைப்பட்டியலை யாழ்ப்பாணத்திலேயே போடப்பட்ட போதும். இச் சங்கங்களினால் வவனியாவிலிருந்தே மா கொண்டு வரப் பட்டது. இந்த மாவை கொண்டு வருவதற்கான போக்குவரத்து செலவாக நல்லூர் பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு மாத்திரம் ஐம்பது ஆயிரம் ரூபாய் ஏற் பட்டுள்ளது. இந்த போக்குவரத்து செலவினை கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்குவதாக உணவு இலாகா வாக்குறுதி அறிந்திருந்தமை குறிப் பிடத்தக்கது.

இருந்தும் நிலமைகள் தற்பொழுது சீரடைந்தும், பல முறை உணவு இலாகாவுடன் தொடர்பு கொண்டும் மா கொண்டு வருவதற்காக ஏற் பட்டுள்ள இந்த ஐம்பதாயிரம் ரூபாவை வழங்குவதில் தொடர்ந்து அக்கறையின்றி இருந்து வருவதாகவும் திரு. கனகசபாபதி தெரிவித்தார். (34)

# சூடானில் ஆட்சிக் கவிழ்ப்பு அரசால் முறியடிப்பு

(காட்டூர்)

சூடானின் இராணுவ ஜனாதிபதி உமான்கசான் பஷீரின் ஆட்சியை கவிழ்க்கும் நோக்குடன் எடுக்கப் பட்ட புரட்சி முறியடிச்சப் பட்டதாக சூடான் வானொலி அறிவித்தது.

முறியடிப்பு பற்றிய மேலதிக விபரங்களை அது வெளியிடவில்லை. ஆயினும் விமானப் படை சிற்று அதிகாரிகளினால் விமானத்தளமும், வானொலி நிலையமும் கைப்பற்ற முயற்சி எடுக்கப்பட்டதாகவும் பின்னர் அவை முறியடிக்சப்பட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன.

# இந்திய இராணுவ தளபதியாக சான்சிஸ்ட் றோட்றிக்

(டில்லி)

இந்தியாவின் புதிய இராணுவத்தலைவராக சுனற் சான்சிஸ்ட் றொட்றிக் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்திய இராணுவத்தின் மேற்குப் பகுதி படைத்தலைவராக இருககும் லெப்டினட் ஜெனரல் றொட்றிக் ஜுலை முதலாந்திகதி பதவி ஏற்பார்.

இதற்குமுன்பாக வி. என். சர்மா இராணுவத் தலைவராக கடமையாற்றினார். இவர் யூன் 30ஆம் திகதி ஓய்வு பெறுகின்றார்.

சுதந்திர இந்தியாவின் 14 ஆவது தலைமைத்தளபதியாக இவர் மூன்று ஆண்டுகள் பதவி வகிப்பார்.

# காத்தான்குடியில் 30 000 ரூபா வீட்டுத்திட்டம் மிக விரைவில்

(காத்தான்குடி)

காத்தான்குடி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் புனர்வாழ்வு அமைச்சு மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் 30,000/- ரூபா பெறுமதியான வீட்டுத்திட்டம் மிக விரைவில் ஆரம்பித்து வைக்கப்படும்.

இத்தகவலை உதவி அரசாங்க அதிபர் ஜனாப் எம். உதுமா லெப்பை பி. ஏ. தெரிவித்தார்.

இவ் வீட்டுத்திட்டத்தின் முதற்கட்ட வேலைகள் எதிர் வரும் றம்ழான் பெருநாளையடுத்து காத்தான்குடி முதலாம் குறிச்சி கிராம சேவகர் பிரிவில் ஆரம்பித்து வைக்கப் படும். இங்கு 28 வீடுகள் நிர்மாணிககப்படும்.

இரண்டாம் கட்ட வேலைகள் காத்தான்குடி 6 ஆம் குறிச்சி கிராமசேவகர் பிரிவில் ஆரம்பமாகும். இ கு 20 வீடுகள் எழுப்பப்படும்.

30,000 ரூபா பெறுமதியான இவ் வீட்டுத்திட்டத்தில் 50 வீதம் மான்யமாகவும், எஞ்சிய 50 வீதம் நீண்ட காலக் கடன் அடிப்படையிலுமாக குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்படும்.

701 ரூபா முதல் 1500 ரூபாவுக்குட்பட்ட மாதவருமானமுடைய உணவு முத்திரைகள் இல்லாத குடுப்பத்தினருக்கே இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படும் என ஜனாப் உதுமா லெப்பை மேலும் தெரிவித்தார். (55)

### இளம் பெண்ணிடம் தங்கச்சங்கிலி அபேஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ்-காங்கேசன் துறை வீதியில் மனோகரா தியேட்டருக்கு அருகாமையில் நேற்று முன்தினம் பிற்பகல் தனிமையில் வந்த இளம் பெண்ணின் தங்கச் சங்கிலி அறுக்கப்பட்டது.

மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாத நபர் ஒருவன் இதனை அறுத்துக் கொண்டு மாயமாக மறைந்து விட்டானாம்.

### காதிநீதிமன்றம் ஆரம்பமாகும்

(காத்தான்குடி)

புனிதரமழான் விடுமுறைக்காக மூடப்பட்டுள்ள காத்தான்குடி காதி நீதி மன்றம், மீண்டும்அடுத்த மாதம் 5ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 00மணிக்குவிசாரணைக்காக திறக்கப்படும்.

இத்தகவலை பிரதேசகாதி நீதிபதியும், முன்னாள் கிராமோதயசபைத்தலைவருமான ஜனாப் எம், பி'எம், மீர, சாஹிபுஜே. பி தெரிவித்தார்.

காதிநீதிமன்றப்பொறுபுகள் தம்மைவந்தடைந்த பின்அயிரக்கணக்கானவழக்குகள்விசாரிக்கப்பட்டு தீர்க்கப்பட்டுள்ளதாவும். கடந்த ஆண்டில்மாத்திரம்அறுநூற்றுக்கும் அதிக [illegible]

கெட் ரசிகர்கள் மத்தியில் மிகவும் பிரபல்யமானதாகும். 1981 இல் இருந்து வருடம் தவறாது இங்கு நடைபெற்று வரும் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பையும் வரவேற்பையும் பெற்றுள்ளது. சார்ஜா போட்டிகள் ஒரு சில நோக்கங்களைக் கொண்டது. சிறந்த கிரிக்கெட் வீரர்களுக்கு பெரும் பணப் பரிசைக் கொடுப்பது அதில் ஒன்றாகும். இதனாலேயே இப்போட்டிகள் C. B. F. S. என்று அழைக்கப்படுகின்றன. (கிரிக்கெட் வீரர் நலன்புரி நிதியத் தொடர்)

இந்த கிரிக்கெட் நிறுவனத்தை ஆரம்பித்து நடாத்திவருபவர் கிரிக்கெட்மீது பெரும் ஆர்வம் கொண்ட அப்துல் ரகுமான் புகாதீர் அவர்கள் இவ்வகையில் இதுவரையில் 30க்கு மேற்பட்ட கடந்த கால இன்றைய கிரிக்கெட் வீரர்கள் பெரும் பணப்பரிசில்களைப் பெற்றுள்ளன. இதில் கூடுதலானவர்கள் இந்திய பாகிஸ்தானிய வீரர்களாகவே காணப்படுகிறார்கள். மேலும் அனைவரும் மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்தவர்களாகவே காணப்படுகிறார்கள். இதற்குக் காரணம் அவர்கள் ஏனைய நாட்டு வீரர்களுடன் ஒப்பிடுகையில் குறைந்த பொருளாதார வளம் கொண்டவர்கள் என்பதாகவும் இருக்கலாம். இவ்வகையில் இம்முறை துலீப் மெண்டிஸ் 35,000 அமெரிக்க டொலர் பரிசுப் பணத்தைப் பெற்றுக்கொள்வார்.

**போட்டியிடும் நாடுகள்**

இம்முறை நடைபெறவுள்ள ஓஸ்ட்ரலேசியா ஒரு நாள் போட்டிகளில் ஆறு நாடுகள் கலந்து கொள்கின்றன். பங்களாதேஷ் தவிர்ந்த ஏனைய ஐந்து நாடுகள் டெஸ்ட் ஆடத் தகுதி பெற்றவையாகும். இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, அவுஸ்திரேலியா, நியூசிலந்து ஆகியனவே அவை இவை இரண்டு பிரிவுகளுக்குட்பட்டு போட்டியிடப் போகின்றன. ஒரு பிரிவில் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் ஆட இன்னொரு பிரிவில் அவுஸ்திரேலியா, நியூசீலாந்து, பங்களாதேஷ் இடம் பெறுகின்றன. தொடர்ச்சியாக நடைபெறும் ஆறு போட்டிகளின் பினனர் மே முதலாம் இரண்டாம் திகதிகளில் இரண்டு அரை இறுதி ஆட்டங்களும் நான்கம் திகதி இறுதியாட்டமும் நடைபெறும்

**பங்குகொள்ளும் ஆசிய நாடுகள்**

பங்கு கொள்ளும் ஆசிய நாடுகளில் மிகப்பலம் வாய்ந்தது பாகிஸ்தானிய அணி என்பதில் சந்தேகமில்லை

யாக் கிண்ணத்தைச் சுவீகரித்தவர்கள். இம்முறையும் இம்ரான்கானின் தலைமையில் சிறந்ததொரு அணி செல்கின்றது. ரமீஸ்ராஜா அணியில் இம்முறை இல்லை என்பது அவதானிக்கத்தக்கது. இதே வேளை மன்சூர்ராணா, சஜாட்அக்பர் ஆகிய இரண்டு புதுமுகங்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள். ஏனைய வீரர்கள் ரசிகர்கள் நன்கு அறிந்த மிகத்திறமையான அணியின் நிரந்தர வீரர்களே 1986 இறுதியாட்டத்தில் சேட்டன்சர்மாவின் இறுதி ஓவரில் எஞ்சியிருந்த மூன்று விக்கெட்டுகளின இரண்டை அவர் வீழ்த்த மிக நெருக்கடியான நிலையில் இறுதிப பந்தில் நான்கு ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் அந்தப் பந்தை மியன்டாட் அற்புதமாகச் சிக்சர் அடித்து வெற்றிக் கிண்ணத்தைப் பாகிஸ்தான் பெற

**நிர்மலன்**

வழிவகுத்ததை ரசிகர்கள் மறக்கவே இயலாது எனவே பாகிஸ்தான் தன் சாப்பியன் பட்டத்தைத் தக்கவைத்துக் கொள்ளவும் வேண்டிய அழுத்தம் இம்முறை உண்டு. சாம்பிய ஸ்டிரபி, நேருகப் சாம்பியன்களாக பாகிஸ்தான் அணியினர் இம்முறை சார்ஜா செல்கிறார்கள்.

அண்மைக் காலங்களில் இந்திய அணியில் பல மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. தூக்கியெறியப்பட்ட சிறிகாந்தும், ரவிசாஸ்திரியும் மீண்டும் அணிக்குள் வரவேற்கப்பட்டுள்ளார்கள். ஒருநாள் கிரிக்கெட்டும், சிறிகாந்தின் அதிரடியும் எவ்வாறு இணைந்து செல்லும் என்பதைப் பற்றி புதிதாக குறிப்பிடத் தேவையில்லை. பந்து வீச்சாளர் பீல்டர்ஸ் பார்வையாளர் எல்லோரையும்நிலைகுலையச் செய்து விடுவார் அவர் இம்முறை அவரது அணிக்காயும் அவருக்காகவும் நிறையவே அவா செய்யக் கடமைப் பட்டுள்ளார் மேலும் அவசியமானபோது அதிஸ்டமான பந்துவீச்சாளராகவும் இருந்துள்ளார். புதிதாக அலல் காம்லே சேர்க்கப்பட்டுள்ளார். இவர்கள் கர்நாடகத்தைச் சேர்ந்த ஆல்ரவுண்டர் ஏனையோரின் சன்ஜய் மன்சைரேக்கர், சச்சின், சித்து, அஸாறாதீன்(தலைவர்) கபில் மனோஜ்,கிரபோரே போன்றோரைக் குறிப்பிடலாம் இந்திய அணி இலகுவில் தோற்கடிக்கப்படககூடிய அணியல்ல என்பது மட்டும் நிட்சயம் இணைந்த ஒருமுழு அணியாக ஆடினார்களாயின சகல அணிக்கும் இந்திய அணி பெரும் தலையிடியாக இருக்கும்:

ஒரு நாள் கிரிக்கெட் ஆட்

கருதி விடுவதில்லை. குறிப்பாக இலங்கையின் பீல்டிஸ் மிகச் சிறப்பானது. நேராகப் ஆட்டங்களின்போது மேற்கு இந்திய அணியைத் தோற்கடிததமையும் இந்தியாவையும் பாகிஸ்தானையும் இறுதி நிமிடம் வரை தடுமாறவைத்ததையும் யாரும் மறந்துவிட இயலாது அரவிந்த டீசில்வா அஸங்க குருசிங்க, அர்ஜுன ரணதுங்கஹஸான் திலகரத்ன அதுல சமர சேகர போன்றோர் சிறந்த துடுப்பாட்ட வீரர்கள் எதிரணிகள் இவர்கள் மீது மிக அக்கறையாகவே இருக்கும் பந்துவீச்சாளரில் ஒரு நாள் ஆட்டங்களில் மிகச் சிறப்பாக பந்து வீசக் கூடியவர் என்ற பெயரை றொமேஷ்ரட்ணாயக்கா தட்டிக் கொண்டவர் அவருடன் இணைந்து ரவி ரத்னாயச்கா சம்பக ராமனாயக்கா, கபில விஜேகுணவர்தனஆகியோரும் நல்ல பந்து வீச்சாளர்களே நீண்ட இடைவெளியின் பின் உவைசுல் கார்னெயின் அணியில் இடம் பெற்றுள்ளார். இவர் ஒரு சிறந்த ஆல்ரவுண்டர் மற்றும் குருப்பு சணத் ஜயசூரிய அசோகடீசில்வா ரஞ்சித் மதுறுசிங்க ஆகியோர் அணியில் இடம் பெறுகின்றனர். லப்ரோய் ஒரு நாள் மகாநாம இருவரும் அணியில் இடம்பெற இயலாமற் போனமை அவைககு பெரும் இழப்பாகும். அரை இறுதி ஆட்டம் வரை இலகுவாக இவர்கள் வருவர் என்று கருதப்படுகிறது.

வங்காள தேசஅணி சில வருடங்களுக்கு முன் ஆசியாக்கப் போட்டிக்காக இலங்கை வந்திருந்தது. இந்தஅணி பெரிதும் அறியப்பட்ட அணியல்ல ஏனைய ஐந்து அணிகளையும் விடப்பலம் குறைந்ததாகவே இருக்கும் இருந்து இப்படியான சர்வதேச ஆட்டங்களில் பங்குகொள்வது இவர்கட்கு சிறந்த அனுபவத்தையும் பயிற்சியையும் கொடுக்கும் டெஸ்ட் ஆடும் மூன்று நாடுகளுக்கு. அண்டைய நாடாக இருக்கும் வங்காளதேசம் மிகவிரைவில் சிறந்ததொரு அணியாகி ஆசிய கிரிக்கெட்டுக்கு பலம் சேர்க்க வேண்டும் என்பது அனைவரதும் விருப்பமாகும்.

**ஓஸானிய அணிகள்:**

1987ல் உலகக் கிண்ணச் சாம்பியன்கள், 1989ல் பென்சன் அண்ட்ஹெஜெஸ் சாம்பியன்கள் தொடர்ந்து றொத்மன் சம்பியன்கள் என்ற சௌரவங்களோடு சார்ஜாவுக்கு அவுஸ்திரேலிய அணி வருகின்றது. அலன்போர்டர் தலைமையில் வரும் அணி எதவையும் இலகுவில் விட்டுக்கொடாது. மார்க் டெயிலர்டீன்ஜோன்ஸ்சைமன் ஓடொனல்.ஓல்டர்மன், மேர்க் ஸ்ரூஸ், போன்றபிரசித்த மான பெயர்களைத் தன்னகத்தே கொண்டது இவ்வணி

தொரு அணி இது. எதிரணியின் சிறு பிழைகளை தனது வெற்றியாக மாற்றுவதில் அலன்போடர் மிகக் கெட்டிக்காரர் சிறப்பாக மிகக் கட்டுக்கோப்புடன் வளர்த்தெடுக்கப்பட்டதொரு அணி அவுஸ்திரேலிய அணி இறுதி ஆட்டத்தக்கு இவர்கள் வராது போனால் அது ஆச்சரியமானதாகவே இருக்கும்.

நியூசிலந்து அணியும் குறைத்து மதிப்பிட முடியாத தொன்று. ஆனால் றிச்சட் ஹட்லி இப் போட்டிகளில் பங்குகொள்ள இயலாமல் இருப்பது நியூசிலந்துக்கு பாரிய இழப்பாகும். இருந்தும் டனி மொரிஸன் எனும் இளைஞர் லேசுப்பட்டவரல்ல, அவுஸ்திரேலிய இந்திய அணிகளைத் திக்குமுக்காடச் செய்தவர் இவர் அணித்தலைவர் ஜோண் ரைட், மார்டின்குறோ விக்கெட் காப்பாளர் ஸ்மித் பிராகசின் நுதர்போட் ஆகியோர் சிறந்த சுருப்பாட்ட வீரர்கள் இவ்வணிமைதானத்தில்சில ஆச்சரியங்களைநிகழ்த்தக் கூடும் அரை இறுதி ஆட்டத்துக்கு தகுதி பொறப்போவது இலங்கையா,நியூசீலந்தா என்று ஊசிப்பது கஸ்டமாகவே இருக்கும்.

எதிர் வரும் நாட்கள் கிரிக்கெட் ரசிகாசளுக்கு பெருவிருந்தாகும். இருந்தும் இலங்கை ரசிகர்களுக்கு,வானொலி நேர் முகவர்ணனையோ அல்லது நேரடி ஒலிபரப்போ கிடைக்குமா என்பது சந்தேகமே. இப்படியான சந்தர்ப்பங்களில் கிரிக்கெட் ஆர்வமுள்ள பாரிய நிறுவனங்கள் அரசின் உதவியோடு ரசிகர்களை மகிழ்விக்குமாயின் ரசிகர்களுக்கு மட்டுமன்றி வளர்ந்து வரும் இளைய கிரிக்கெட் தலைமுறையினருக்கும் மிகவும் உபயோகமாக இருக்கும்.

## காத்தான்குடியில் 30,000 ரூபா வீட்டுத்திட்டம் மிக விரைவில்

(காத்தான்குடி)

காத்தான்குடி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் புனர்வாழ்வு அமைச்சு மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் 30,000/- ரூபா பெறுமதியான வீட்டுத்திட்டம் மிக விரைவில் ஆரம்பித்து வைக்கப்படும்.

இத்தகவலை உதவி அரசாங்க அதிபர் ஜனாப் எம். உதுமா லெப்பை பி. ஏ. தெரிவித்தார்.

இவ் வீட்டுத்திட்டத்தின் முதற்கட்ட வேலைகள் எதிர் வரும் றம்ழான் பெருநாளையடுத்து காத்தான்குடி முதலாம் குறிச்சி கிராம சேவகர் பிரிவில் ஆரம்பித்து வைக்கப் படும். இங்கு 28 வீடுகள் நிர்மாணிககப்படும்.

இரண்டாம் கட்ட வேலைகள் காத்தான்குடி 6 ஆம் குறிச்சி கிராமசேவகர் பிரிவில் ஆரம்பமாகும். இங்கு 20 வீடுகள் எழுப்பப்படும்.

30,000 ரூபா பெறுமதியான இவ் வீட்டுத்திட்டத்தில் 50 வீதம் மானயமாகவும்,எஞ்சிய 50 வீதம் நீண்ட காலக் கடன் அடிப்படையிலுமாக குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்படும்.

701 ரூபா முதல் 1500 ரூபாவுக்குட்பட்ட மாதவருமானமுடைய உணவு முத்திரைகள் இல்லாத குடுப்பத்தினருக்கே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என ஜனாப் உதுமா லெப்பை மேலும் தெரிவித்தார். (55)

## சர்வதேசக் கல்லூரி நடத்தும் இலகு ஆங்கிலம்

(கொழும்பு)

கொழும்பில் அமைந்திருக்கும் சர்வதேசக் கல்லூரி இந்த ஆண்டு இறுதிக்குள் தொடர்பு சாதனங்களான வானொலி, தொலைக்காட்சி மூலமாக ஆங்கில பாடங்களை நடாத்தவுள்ளது. பள்ளிக் கூடங்களை விட்டு விலகிய 16-18 வயதுக் குழுவினருக்கும், அதற்கு மேற்பட்ட வயதினருக்கும் பயன்படத்தக்கதாய் இக்கற்கை நெறிக்கான பாடத் திட்டம் அமையவுள்ளது.

அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கமையவே இக்கற்கை நெறி ஆரம்பிக்கப்படவுள்ளதாக இக்கல்லூரியின் அதிபர் எலிசபேத்மெயர் தெரிவித்தார்.

இத்திட்டத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்தும் வகையில் இங்கிலாந்திலிருந்து இத்துறை சார்ந்த நிபுணர்களும், ஆதிரியர்களும் அழைக்கப்படவுள்ளார்கள். இதற்கான உதவியை பிரிட்டிஷ் கவுண்சிலும் வழங்குமென எதிர் பார்க்கப் படுகிறது.

தொலைக்காட்சிக்கும், வானொலிக்கும் என இலங்கைப் பின்னணியைக்கொண்டு தயாரிக்கப்படும் ஆங்கிலப் பாடத்திட்டத்தில் உள்ளூர் நடிகர்கள் பயன்படுத்தப்படவிருக்கிறார்கள்.

கட்புல,செவிப்புல சாதனங்களில் கற்பிக்கப்படும் பாடங்களை இலகுவில் கற்றுக் கொள்ளலாம் என்ற கருத்துக்கமையவே இக்கற்கை நெறியும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

விட்டானாம்.

## காதிநீதிமன்றம் ஆரம்பமாகும்

(காத்தான்குடி)

புனிதரமழான் விடுமுறைக்காக மூடப்பட்டுள்ள காத்தான்குடி காதி நீதி மன்றம், மீண்டும்அடுத்த மாதம் 5ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.00மணிக்குவிசாரணைக்காக திறக்கப்படும்.

இத்தகவலை பிரதேசகாதி நீதிபதியும், முன்னாள் கிராமோதயசபைத்தலைவருமான ஜனாப் எம், பி'எம், மீர, சாஹிபுஜே.பி தெரிவித்தார்.

காதிநீதிமன்றப்பொறுபுகள் தம்மைவந்தடைந்த பின்அயிரக்கணக்கானவழக்குகள்விசாரிக்கப்பட்டு தீர்க்கப்பட்டுள்ளதாவும். கடந்த ஆண்டில்மாத்திரம்அறுநூற்றுக்கும் அதிகமான வழக்குகளுக்கு தீர்வு கண்டுள்ளதாகவும் அவர் மேலும்தெரிவித்தார் (55)

## ஆலயங்களுக்கு விஜயம்

அக்கரைப்பற்று

அம்பாறை மாவட்ட இந்து ஆலயங்களின் தற்போதைய நிலை பற்றி முழுமையாக அறிந்து கொள்ளும் முகமாக மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றக் குழுவினர் அம்பாறை மாவட்டத்திற்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றினைக் கடந்த வாரம் மேற்கொண்டிருந்தார்கள்.

மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத் தலைவர் திரு. மா. சிவனேசராசா தலைமையிலான இக்குழு மாவட்டத்தில் கும்பாபிஷேகம்செய்யப்படாத நிலையிலுள்ள வழிபாட்டுத் தலங்களுக்கு விஜயம் செய்து இவ்வாலய எதிர்கால நிலை பற்றி ஆராய்ந்திருக்கின்றார்கள்.

## ஹாஜாஜீ காணிக்கை உண்டியல்

அஜ்மீர் நகரில் சமாதியுற்று அற்புதங்கள் பல நிகழ்த்தி வரும் ஆன்மீகப் பெருந்தகை ஸெய்யிதுனா ஹஸரத் ஹாஜா முயீனுத்தீன் ஜிஷ்தி (ரலி) அவர்களின் பெயரால் காணிக்கை உண்டியல் ஒன்று நிறுவப்படும்.

காத்தான்குடி பத்ரிய்யா ஜும்ஆப்பள்ளிவாயல் வீதியில் அமைந்துள்ள ''கரீப் நவாஸ்'' நிறுவன முன்றலில் இவ்வுண்டியல் எதிர்வரும் நோன்புப் பெருநாள் தினம் பெருநாள் தொழுகைக்குப்பின் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்படும்

அகில இலங்கை இஸ்லாமிய மெய்ஞ்ஞானப் பேரவையின் தேசியத் தலைவர் மௌலவி அல்ஹாஜ் ஏ. அப்துர்றவூப் (மிஸ்பாஹி) அவர்களால் இக்காணிக்கை உண்டியல் நிறுவப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது. (55)

பரந்தன் கூட்டுத்தாபன ஊழியருக்கு

## மூடப்பட்ட காலத்திற்கும் முழுச்சலுகையும் சம்பளமும்!

(பரந்தன்)

பரந்தன் இரசாயன தொழிற்சாலை மூடப்பட்ட காலங்களில் ஏனைய அரச ஊழியர்கள் பெற்றிருந்த சம்பள அதிகரிப்பு உட்பட சகல சலுகைகளும் தொழிற்சாலை செயல்படத் தொடங்கியவுடன் கடமையாற்றும் ஊழியர்களுக்கு வழங்கப்படும்.

இத்தகவலை பரந்தன் இரசாயன கூட்டுத்தாபன புதிய தலைவர் திரு. உபாலித சில்வா ஈழநாதத்திற்கு தெரிவித்தார்.

1985ம் ஆண்டுமுதல் தொழிற்சாலை மூடப்பட்டிருந்தது 1936இலும் 1988-ம் ஆண்டுகளில் இரு தடவை அரச ஊழியர்களின் சம்பளம் மீளாய்வு செய்யப்பட்டன. ஆனால் இத் தொழிற்சாலை மூடப்பட்ட காரணம் கூறி இவ் மீளாய்வு அமுல் செய்யப்படவில்லை எனறும் அவர் குறிப்பிட்டார்.

மேற்படி இரு மீளாய்வுகளையும் எதிர் வரும் ஜூன் மாதம் முதல் அமுல் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் ரூபா 260 வாழ்க்கை செலவு, ரூபா 200 அலவன்ஸ் என்பன கடந்த ஜனவரி மாதம் முதல் வழங்கப்படுகிறது

தற்போது 320 ஊழியர்கள் உள்ளனர். மாதாந்தம் ரூபா 7 இலட்சம் சம்பளமாக வழங்கப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார். (37)

# யாழ். புகையிரத நிலையத்தில் போட்டர் பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

யாழ். புகையிரத நிலையத்தில் போட்டர் (சுமையாள்) பற்றாக்குறை நிலவுகிறதாம். 25 போட்டர்கள் இருக்க வேண்டிய இடத்தில் 10 போட்டர்கள் தான் கடமையில் உள்ளார்கள். அசம்பாவிதங்களின் போது, புகையிரதச் சேவை நிறுத்தப்பட்ட சமயம் புகையிரதத் திணைக்களம் மேற்கொண்ட ஆட்குறைப்பு நடவடிக்கையால் போட்டர்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. முன்பிருந்த பிரமாணங்களின்படி புகையிரத நிலைய அதிபர்கள் போட்டர்களுக்கான நியமனங்களைச் செய்யலாம். ஆனால், இந்த அதிகாரம் தற்சமயம் புகையிரத நிலைய அதிபர்களிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் நிலைய அதிபர்கள், புதிய நியமனங்களை வழங்கி மற்றவர்களின் வேலைப் பழுவைக் குறைக்க முடியாத நிலையில் உள்ளதால், சில போட்டர்கள் 48 மணிநேர வேலையைச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளனர் என்று புகையிரத நிலைய உயர் அதிகாரி தெரிவித்தார்.

## தந்தை செல்வா சிரார்த்த தினம்

எதிர்வரும்வியாழன் 26–ஆம் திகதி எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் 13-வதுசிரார்த்த தினமாகும்.

1947-ல் பாராளு மன்றப் பொதுத் தேர்தலில் ஒரு வேட்பாளராகப் பொது வாழ்வில் பிரவேசித்த செல்வநாயகம் தனது மரண பரியந்தம் பொதுவாழ்வில் ஈடுபட்டார்.

# "பாடசாலை அனுமதியில்லையேல் வழக்குத் தொடரலாம்" லலித்

(கொழும்பு)

பாடசாலைகளில் பிள்ளைகளை அனுமதிப்பதற்கு ஒவ்வொரு பாடசாலையிலும் குழு ஒன்றை அமைக்கப் போவதாக கல்வி, உயர் கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி வார இறுதியில் தெரிவித்தார்.

இது தொடர்பான நிபந்தனையடங்கிய சுற்று நிருபம் ஒன்று வெகு விரைவில் தயாரிக்கப்பட விருப்பதாக வாட்பிளேசில் அமைந்துள்ள உயர் கல்வி அமைச்சின் பொதுஜனத் தொடர்பு நிலையத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

பாடசாலை அனுமதிக் குழுக்களான அங்கத்தவர்கள் பெற்றோர் முன்னிலையில் தெரிவு செய்யப்படுவார்கள். கல்லூரி அதிபரும் பதவிவழி காரணமாக குழுவில் இடம் பெறுவார். அனுமதிக்கப்பட்ட பிள்ளைகளின் பெயரும், முகவரியும், அவர்கள் தெரிவாகியதற்கான காரணங்களும் பெற்றோர்களது பார்வைக்கு வைக்கப்படும் ஒரு மேன் முறையீட்டுக் குழுவும் அமைக்கப்படவுள்ளது. தகமை இருந்தும், தமது பிள்ளைகளுக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்று கருதும் பெற்றோர் மேன் முறையீடு செய்யலாம். மேன் முறையீட்டுக் குழுவின் தீர்ப்பிலும் தவறுள்ளது என்று கண்டால் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கலாம். இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

உயர் அதிகாரிகள், அரசியல் தலையீட்டுக்கு இவ்விடயத்தில் இடமிருக்காது என்றும், இதே போலத்தான் எவ்வித தலையீடுமின்றி ஆசிரியர் இடமாற்றமும், ஆசிரியர் நியமனமும் நடைபெறும் என்றார். அமைச்சர் அத்துலத்முதலி.

அவர் மேலும் தெரிவிக்கையில், கல்விச் சேவை ஆணைக்குழுவிற்குத் தான் கொள்கை விளக்கம் தரவிருப்பதாகவும், ஆசிரியர் பிரச்சினைகளை ஆசிரியர்களோடு கலந்தாலோசித்து செயலாற்றுவதோடு, ஆசிரியர் நியமனங்கள் தொடர்பாக அமைச்சர் அவை வகுக்கும் கொள்கைக்கமைய நியமனம் வழங்கப்படுவதோடு, ஜனாதிபதி பிரேமதாஸவின் ''சகலருக்கும் சமசந்தர்ப்பம்'' என்ற கொள்கையை கருத்தில் கொள்ள வேண்டும் என்றார்.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசுப் பணத்தை பெறுவதில் தாமதம், பணத்தைக் கையாழுதல் போன்றவற்றைத் தடுக்கும் வகையில் மாணவர் பெயரில் கணக்குத் திறந்து, புலமைப் பரிசுப் பணம் கணக்கிடப்படும் என்றார்.

அரசியல் அடிப்படையில் நியமனங்களில் பரிவு காட்டுதலுக்கு இடமில்லை. தேர்தல் காலங்களில் அரசியல் காரணங்களுக்காக வேலை தருவதாகச் சொல்வது சட்ட விரோதமானதாகும். தேர்தல் கட்டங்களும் யாப்பும் திருத்தப்படவேண்டும் என்று கூறிய அமைச்சர் அத்துலத்முதலி, இனிமேல் அரசாங்க துறையில் மேலதிக வேலை வாய்ப்பு வழங்கப்படாதென்றும் தனியார் துறைவேலை, சுயமுயற்சி, தொழில் வாய்ப்புகளுக்கு தாம் உதவி வழங்க விருப்பதாகவும் தெரிவித்தார்.

## ஸ்ரீ இராமானுஜர் ஜெயந்தி

(வண்ணார்பண்ணை)

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் எதிர்வரும் (29-4-90) அன்று ஸ்ரீ சுதர்சன சக்கர வழிபாடும் ஸ்ரீ இராமானுஜ ஜெயந்தியும் கொண்டாடப் படவுள்ளன.

அன்றைய தினம் காலை 7.00 மணிக்கு ஸ்நபன பூசை ஆரம்பமாகி தொடர்ந்து சுதர்சன ஹோமமும் பி.ப. 5.00 மணிக்கு ஸ்ரீ இராமானுஜா ஜெயந்தி உற்சவமும் நிகழவுள்ளன.

## அம்பாறை - மட்டக்களப்பு எல்லைக்கிராம தமிழ் மக்களை மீண்டும் குடியமர்த்த நடவடிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட எல்லைக் கிராமமான கெவிளியாமடு கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்துள்ள 250தமிழ்குடும்பங்களை மீளக்குடியமர்த்த அரச அதிபர் திரு ஆர் யோகநாதன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது தொடர்பான ஆலோசனை கூட்டமொன்றுநேற்று கெவிளியாமடு அகதிகள் புனர்வாழ்வு ஏற்பாடு செய்திருந்தும் அரச அதிபர் திரு. ஆர் யோகநாதன்புனர்வாழ்வு திட்ப்பணிப்பாளர் திரு, ஐரனியஸ் செல்வின் உட்பட அதிகாரிகள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

மேற்படி குடும்பங்கள் மீளக்குடியமர்வு ' புனர்வாழ்வு என்பன குறித்து ஆராயப்பட்டது (37)

## பள்ளிவாசலில் சைக்கிள் திருட்டு

(கத்தான்குடி)

கத்தான்குடி பத்ரிய்யா ஜசம் ஆப் பள்ளிவாசலில் முன்பு நிறுத்தப்பட்டிருந்தை சக்கிளைத்திருடிய 11வயது பள்ளி மாணவன் கையும்மெய்யுமாக பிடிபட்டார்.

பின்னர் காத்தான்குடிப்பிரதேசவிடுதலைப்புலிகளமக்கள் முன்னணி பிரமுகர் ஜனாப்.ஏ கே.எம், குத் தூஸிடம் ஒப்படைக்கப்பட்டார்,

முன்னரும் இரு சைக்கிள்களைதான் இங்கிருந்தேதிருடியிருப்பதாக புலிகளின் விசாரணையில் அச்சிறுவன் ஒப்புக் கொண்டுள்ளார்.

## தீன் வீதிக்கு வெளிச்சம் ஏற்படுத்த மக்கள் கோரிக்கை

(காத்தான்குடி)

காத்தான்குடி 6ஆம் குறிச்சி தீன்வீதிக்கு மேலதிக வெளிச்ச வசதி ஏற்படுத்த வேண்டுமென இவ்வீதிவழியாக பிரயாணம் செய்வோர் வேண்டுகின்றனர்.

கர்பலாகிராமம், புதியகாத்தான்குடி, பாலமுனை, நடுவோடை போன்ற கிராமங்களில் வதியும் பொதுமக்கள் காத்தான்குடிக்கு வருகை தர இவ்வீதியே பிரதான பாதையாகப் பயன்படுத்துகின்றனர்.

இவ்வீதி நீண்டகாலமாக மணல் செறிந்த கிறவல் வீதியாக இருந்து வந்தது.

மட்டக்களப்பு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாப் அகமட்றிஸ்வி சின்னலெப்பை அவர்கள் மேற்கொண்ட முயற்சியின் பலனாக இவ்வீதியை கற்பாதையாக அமைக்க பெருந்தெருக்கள் திணைக்களம் தற்போது நடவடிக்கைஎடுத்துவருகிறது.

வீதியோரம் கற்கள் குவிக்கப்பட்டு பல மாதங்கள் ஆகிவிட்டன. அவை சரிந்து வீதியில் பரந்துகிடப்பதால் பாதசாரிகளும், சைக்கிள்-வாகனப் பாவனையாளர்களும் பெரிதும் சங்கடப்படுகின்றனர். குறிப்பாக இரவு வேளைகளில் பிரயாணம் செய்வோர் போதிய தெருவெளிச்சம் இல்லாத காரணத்தால் கஷ்டப்பட்டே பிரயாணம் செய்கின்றனர்.

அடிக்கடி விபத்துக்களும் இவ்வீதியில் இருளின் காரணமாக ஏற்பட்டு வருகின்றன. எனவே, மேலதிகமாக வெளிச்வசதியை இவ்வீதிக்கு ஏற்படுத்த வேண்டியது அவசியம் என பலரும் எமது நிருபரிடம் வலியுறுத்தி வருகின்றனர். (55)

## பூநகரியில் விளையாட்டுக்கள்

(ஈச்சமோட்டை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியும் பூநகரிப் பொதுமக்களும் இணைந்துடைாத்தியஅன்னை பூபதியின் இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி கூட்டமும் எழுச்சி விழாவும் கடந்த 18ஆம் 19ஆம் திகதிகளில் பூநகரி முழங்காவில் மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில்நடைபெற்றது.

இறுதி நாளான 19 ஆம் திகதி இரவு நடைபெற்ற பொதுகூட்டத்தில் மன்னார் மாவட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி பொறுப்பாளர் சாம் மன்னார் மாவட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் மகளிர் படைப்பிரிவைச் சேர்ந்த யூறி உட்பட பல பிரமுகர்களும் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

விளையாட்டுப் போட்டிகளில் உதைபந்தாட்டப் போட்டியில் விடத்தல் தீவு ஐக்கிய விளையாட்டுக் கழகம் அன்னை பூபதியின் ஞாபகார்த்த வெற்றிக்கேடயத்தை சுவீகரித்து கொண்டது

கரப்பந்தாட்டப் போட்டியில் குமுனமுனை சென்அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டது. (43)

## இ.போ.ச. ஊழியர்களுக்கு கிழக்கில் பயிற்சி வகுப்புக்கள்

(அட்டாளைச்சேனை)

கிழக்குப் பிரதேசப் போக்குவரத்துச் சபையின் சகல ஊழியர்களுக்கும்டிப்போவாரியாக மேலதிகாரிகளினால் விஷேட பயிற்சி வகுப்பு ஒன்று நடாத்தும் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதன் ஆரம்பமாக அக்கரைப்பற்றுச் சாலையில் சென்ற 18ஆம் திகதி காலை 10.00 மணியளவில் சாலையின் காரியாலய உத்தியோகஸ்தர்களுக்கு மட்டுமான வகுப்பு நடைபெற்றது இதில் சாலை முகாமையாளர், செயலாற்று உதவியாளர், சாலைப் பொறியியலாளர், சாலைப் பரிசோதகர்கள்,எழுது வினைஞர்கள் களஞ்சியப் பொறுப்பாளர்கள், பாதுகாப்பு உத்தியோகஸ்தர் ஆகியோர்கள் உள்ளடங்கியதாக இருந்தது.

இப்பயிற்சி வகுப்பிற்கு சபையின் தலைவர் ஜனாப் ஏ. ஆர் முகமட் அலி ஆரம்பித்து வைத்து உரையாற்றும போது இப்பயிற்சி வகுப்பு நடாத்தப்படும் நோக்கம் கடந்த காலங்களில் எமது கடமைகளில், எமது பகுதியில் ஏற்பட்ட பாதகமான சூழ்நிலை காரணமாக இருந்த சீரற்ற சேவையினை மீண்டும் உயிர்ப்பிப்பதற்காகவும், கடந்த காலங்களில் கைவிடப்பட்டிருந்த காரியாலய தஸ்தாவேஜுகளை மீண்டும் நல்ல முறையில் நடைமுறைப்படுத்துவதற்காகவே ஆகும் எனக் கூறினார்.

## காலமானவர்களின் உணவு முத்திரைகள்

காலமானவர்கள் பலரின் உணவு முத்திரைகளும், மண்ணெண்ணை முத்திரைகளும் கிராம சேவகரிடம் மீளவும் ... யைக் கண்டு பிடித்தார். இவரது பணிப்புக்கமைய சட்ட விரோதமாக உணவு முத்திரைகளையும், மண்ணெண்

## சூசைப் பிள்ளையார் குளத்தில் ஆடு, மாடுகள் வெட்டப் படுவதால் கழிவுப்பொருள் துர்நாற்றம் மக்கள் இடம் பெயர முயற்சி

(வவுனியா)

வவுனியா நகரப் பகுதியான சூசைப் பிள்ளையார் குளத்தில் இறைச்சிக்காக ஆடு,மாடுகளை வெட்டி, அவற்றின் ...

இராணுவம் இவ்விடத்தில் முகாம் அமைத்ததன் பின். ஆடு, மாடுகளை வெட்டும் வேலைகள் சூசைப் பிள்ளையார் குளத்தில் பொது மக்கள் வாழும் பகுதிக்கு மாற்றப் ... செய்யப் பட்டு வருவதால் அப்பகுதி யெங்கும் துர் நாற்றம் வீசுவதாகவும், காகங்கள் மற்றும் நாய்கள் இறைச்சித் துண்டுகளையும், எலும்புகளையும் வீடுகளுக் கருகில் போடுவதாகவும் புகார் தெரிவிக்கப்

## புதிய நிர்வாகிகள்

(கோண்டாவில்)

நல்லூர் பிரதேச சனசமூக நிலையங்களின்சமாஜபொதுக் கூட்டம் கொக்குவில் வளர் மதி சனசமூக நிலைய மண்டபத்தில்நடைபெற்றது.

திரு. செ. சண்முகலிங்கத்தின் தலைமையில்நடைபெற்ற மேற்படிக் கூட்டத்தில் பின் வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகதெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்- சு.சுந்தரலிங்கம் உப தலைவர்- செ.சண்முகலிங்கம் செயலாளர்- வி.பூபாலப்பிள்ளை உபசெயலாளர் எஸ். முதலி தனாதிகாரி க. சிவஞானம், கணக்காய்வாளர் சின்னையா

பத்து பேர்கொண்ட நிருவாக கமிட்டியும் தெரிவு செய்யப்பட்டது (34)

## மனாகிப் மஜ்லிஸ்

(காத்தான்குடி)

ஸூபி மன்ஸிலை இலங்கையிலும், இந்தியாவிலும் நிறுவி ஆண்மீகப் பணிசெய்த பெரி

யாழ். திரையரங்குகளில்

ளில் வதியும் பொது மக்கள் காத்தான்குடிக்கு வருகை தர இவ்வீதியே பிரதான பாதையாகப் பயன்படுத்துகின்றனர்.

இவ்வீதி நீண்டகாலமாக மணல் செறிந்த கிறவல் வீதியாக இருந்து வந்தது.

மட்டக்களப்பு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாப் அகமட்ரிஸ்வி சின்னலெப்பை அவர்கள் மேற்கொண்ட முயற்சியின் பலனாக இவ்வீதியை கற்பாதையாக அமைக்க பெருந்தெருக்

பிரயாணம் செய்வோர் போதிய தெருவெளிச்சம் இல்லாத காரணத்தால் கஷ்டப்பட்டே பிரயாணம் செய்கின்றனர்.

அடிக்கடி விபத்துக்களும் இவ்வீதியில் இருளின் காரணமாக ஏற்பட்டு வருகின்றன. எனவே, மேலதிகமாக வெளிச் வசதியை இவ்வீதிக்கு ஏற்படுத்த வேண்டியது அவசியம் என பலரும் எமது நிருபரிடம் வலியுறுத்தி வருகின்றனர். (55)

பொதுக்கூட்டத்தில் மன்னார் மாவட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி பொறுப்பாளர் சாம் மன்னார் மாவட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் மகளிர் படைப்பிரிவைச் சேர்ந்த பூபி உட்பட பல பிரமுகர்களும் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

விளையாட்டுப் போட்டிகளில் உதைபந்தாட்டப் போட்டியில் விடத்தல் தீவு ஐக்கிய விளையாட்டுக் கழகம் அன்னை பூபதியின் ஞாபகார்த்த வெற்றிக்கேடயத்தை சுவீகரித்து கொண்டது

கரப்பந்தாட்டப் போட்டியில் குமுனமுனை சென்அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டது. (43)

லாம். இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

உயர் அதிகாரிகள், அரசியல் தலையீட்டுக்கு இவ்விடயத்தில் இடமிருக்காது என்றும், இதே போலத்தான்

வருப்பு நடைபெற்றது இதில் சாலை முகாமையாளர், செயலாற்று உதவியாளர், சாலைப் பரிசோதகர்கள், எழுது வினைஞர்கள் களஞ்சியப் பொறுப்பாளர்கள், பாதுகாப்பு உத்தி

கடந்த காலங்களில் கைவிடப்பட்டிருந்த காரியாலய தஸ்தாவேஜுகளை மீண்டும் நல்ல முறையில் நடைமுறைப்படுத்துவதற்காகவே ஆகும் எனக் கூறினார்.

தின் தலைமையில்நடைபெற்ற மேற்படிக் கூட்டத்தில் பின் வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகதெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்- சு.சுந்தரலிங்கம் உப தலைவர்- செ.சண்முகலிங்கம் செயலாளர்- வி.பூபாலப்பிள்ளை உபசெயலாளர் எஸ். முதலி தனாதிகாரி க. சிவஞானம், கணக்காய்வாளர் சின்னையா

பத்து பேர்கொண்ட நிருவாக கமிட்டியும் தெரிவு செய்யப்பட்டது. (34)

## காலமானவர்களின் உணவு முத்திரைகள்

காலமானவர்கள் பலரின் உணவு முத்திரைகளும், மண்ணெண்ணை முத்திரைகளும் கிராம சேவகரிடம் மீளவும் ஒப்படைக்கப் படாமல் உறவினர்களால் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வந்த மோசடி தற்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இரண்டு வருடங்களாக இவ்வாறு மரணமடைந்தவரின் உணவு முத்திரைகளை ஒப்படைக்காமல் பாவித்து வந்தவர்களும் புதிய கிராம சேவகரின் தீவிர பரிசீலனை நடவடிக்கையால் அகப்பட்டனர்.

காத்தான்குடி 6ஆம் குறிச்சி ஏழைக் குடும்பங்களுக்கு கிராம சேவகர் இம் மோசடியைக் கண்டு பிடித்தார். இவரது பணிப்புக்கமைய சட்டவிரோதமாக உணவு முத்திரைகளையும், மண்ணெண்ணை முத்திரைகளையும் வைத்திருந்தவர்கள் அவற்றை கிராமசேவையாளரிடம் கையளித்துள்ளனர்.

தகுதி வாய்ந்தவர்களல்லாதோரிடம் இருந்து இவ்வாறு பறிமுதல் செய்யப்பட்ட 62 உணவு முத்திரைகளும் 32 மண்ணெண்ணை முத்திரைகளும் வறுமைக் கோட்டுக் குட்பட்ட முறைப்படி விநியோகிக்கப்படும் என ஜனாப் இபுறா லெப்வப நமது நிருபரிடம் தெரிவித்தார். (55)

## யாழ். திரையரங்குகளில் ஏமாற்று வேலைகள்

யாழ்ப்பாண திரையரங்குகளில் ஏமாற்றும் வேலைகள் இப்பொழுது தாராளமாக நடைபெறுகிறது. திரைப்படம் பார்க்க செல்பவர்கள் கொடுக்கும் பணத்திற்கு ஏற்ற இடங்களில் அவர்கள் அமர்த்தப் படுவதில்லை. ''ரிசேவ்'' ரிக்கெட்டுகளில் அமர்த்தப்படுபவர்கள் இரண்டாம் வகுப்பில் பலவந்தமாக அமர்த்தப்படுகின்றனர் என படம் பார்க்க சென்றவர்கள் முறையிடுகின்றனர். (லோ)

சூசைப் பிள்ளையார் குளத்தில் ஆடு, மாடுகள் வெட்டப் படுவதால்

# கழிவுப்பொருள் துர்நாற்றம் மக்கள் இடம் பெயர முயற்சி

(வவுனியா)

வவுனியா நகரப் பகுதியான சூசைப் பிள்ளையார் குளத்தில் இறைச்சிக்காக ஆடு, மாடுகளை வெட்டி, அவற்றின் கழிவுப் பொருட்களை அப்புறப் படுத்தாமல் அவ்விடத்திலேயே போட்டுவைப்பதால் நோய்களுக்கு உள்ளாகின்றனர் அத்துடன் அந்த இடத்தை விட்டு இடம் பெயரவும் தொடங்குகின்றனர்.

சில வருடங்களுக்கு முன்னர் இறம்பைக் குளம் சுடலையருகே இதற்கான இடம் ஒதுக்கப் பட்டிருந்தது இந்திய இராணுவம் இவ்விடத்தில் முகாம் அமைத்ததன் பின். ஆடு, மாடுகளை வெட்டும் வேலைகள் சூசைப் பிள்ளையார் குளத்தில் பொது மக்கள் வாழும் பகுதிக்கு மாற்றப் பட்டது.

இந்திய இராணுவம் இறம்பைக் குளம் சுடலைப் பகுதியை விட்டு விலகி பல மாதத்களான போதிலும், அவ்விடங்தில் மீண்டும் ஆடு, ம்ாடுகள் வெட்டும் வேலைகள் ஆரம்பிக்கப் படவில்லை.

மக்கள் அடர்த்தியாக வாழும் பகுதியில் இவ்வேலைகள் செய்யப் பட்டு வருவதால் அப்பகுதி யெங்கும் துர் நாற்றம் வீசுவதாகவும், காகங்கள் மற்றும் நாய்கள் இறைச்சித் துண்டுகளையும், எலும்புகளையும் வீடுகளுக் கருகில் போடுவதாகவும் புகார் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இம் பகுதியில் தான் வவுனியா நகரசபை சுகாதரப் பகுதி அதிகாரிஒருவரின் வீடும் இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (தி)

## மனாகிப் மஜ்லிஸ்

(காத்தான்குடி)

ஸூபி மன்ஸிலை இலங்கையிலும், இந்தியாவிலும் நிறுவி ஆன்மீகப் பணிசெய்த பெரியார் சங்கைக்குரிய அஷ்ஷெய்கு அல்ஹாஜ் ஸூபி ஹழறத் (ரஹ்) அவர்களின் பெயரால் வருடாந்தம் நடாத்தப்பட்டு வரும் மனாகிப் மஜ்லிஸ் காத்தான்குடியில் மலை நடைபெற்றது. (55)

# புகையிரதமும் போக்குவரத்துச் சபை பஸ்ஸும் காலதாமதமாகி வந்தன

(யாழ்ப்பாணம்)

அட்டவணைப்படிஅதிகாலை 4.45 மணிக்கு யாழ். புகையிரத நிலையம் வந்தடைய வேண்டியமெயில்புகையிரத வண்டி காலதாமதமாகி நேற்றுக் காலை 6.25 மணியளவில் யாழ்புகையிரத நிலையம் வந்தடைந்தது. ஆனால்,வடபிராந்திய போக்கு வரத்துச் சபை புகையிரத இணைப்புச் சேவை பேருந்து மு.ப. 7.15 அளவில் புகையிரதநிலையத்துக்கு வந்தது.

பிரயாணிகள் மூட்டைமுடிச்சுக்களுடன்ா கால்நடையகவும் தனியார் வாடகை வாகனங்களிலும் யாழ் பேருந்து நிலையம்சென்றநடைந்தார்களாம்.

# மீண்டும்யாழ். மாவட்டததில் விளையாட்டுப் பயிற்சிகள்

(ஈச்சமோட்டை)

யாழ்.மாவட்டத்தில் இளைஞர்கள் மீண்டும் உடற்பயிற்சியில் ஈடுபட்டுவருகிறார்கள். விடியற் காலையில் வீதிகளில் இவர்கள் ஓடுவதையும் சைக்கிள் றேஸ் ஓடுவதையும் காண முடிகிறது.

மற்றும் சனசமூக நிலையங்கள் கழகங்கள் தங்களது ஆண்டு விழாவை கொண்டாட சுறுசுறுப்பாக ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த காலங்களில் இவை நடைபெற முடியாத சூழ்நிலையிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இதே போல விளையாட்டு மைதானங்களிலும் மாலை நேரங்களிலும், ஓய்வு நாட்களிலும் இளைஞர்கள் விளையாட்டுக்களில் ஈடுபட் வருவதையும் காண முடிகிறது.

இதேசமயம் விளையாட்டு அமைச்சு வடக்கு கிழக்கு மாகாணங்களில்விளையாட்டு துறையை ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்துவருகிறது. (43)

# ச. ச. நிலையங்களின் சேவை கிராமங்களுக்கு மிகத்தேவை

''இலங்கை சுதந்திரமடைந்து 1949ஆம் ஆண்டுக்குப் பின்பே சனசமூக நிலையங்கள் உருவாகின. இந்த நிலையங்கள் கிராமங்கள் தோறும் அளப்பரிய பணியினை ஆற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

இருந்தும் கடந்த காலத்தில் நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலைமைகளின் நிமித்தம் இந் நிலையங்களின் செயல்பாடுகளில் பல தேக்க நிலைமைகள் உருவாகியமையும் கவனத்திற்குரியது.

தற்பொழுது அந்த நெருக்கடி நிலைமை மாற்றமடைந்து சுமூக நிலை நிலவுவதால் இந்நிலையங்கள் மீண்டும் புதிய உத்வேகத்துடன் செயல்பட முன்வர வேண்டும்.

இவ்வாறு நல்லூர் பல நோக்கு கூட்டுறவு சங்கங்களின் தலைவர் திரு. கனக சபாபதி தெரிவித்துள்ளார்.

நல்லூர் பிரதேச சனசமூக நிலையங்களின் சமாஜத்தின் பொதுக்கூட்டம் கொக்குவில் வளர்மதி சனசமூக நிலைய மண்டபத்தில் திரு செ. சன்முகலிங்கம் தலைமையில் இடம் பெற்றது.

அவர் தொடர்ந்து தமது உரையின் போது ஏறக்குறைய 454 சனசமூக நிலையங்கள் எமது பிரதேசத்தில் இயங்கி வருகின்றன. இந்த நிலையங்கள் யாவும் கிராம சூழலை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வரவேண்டும்'' என்றார்.

சம்மேளனத்தின் தலைவர் திரு. தவகோபால் உட்பட வேறு பலரும் இக்கூட்டத்தில் பேசியதுடன் புதிய நிருவாகிகள் தெரிவும் நடைபெற்றது. (24)

## உணவு முத்திரை வழங்கல்

(ஈச்சமோட்டை)

ஈச்சமோட்டை கிராம சேவையாளர் பிரிவில் புதிய உணவு முத்திரைகள் வழங்கும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

இக்கிராம சேவையாளர் பிரிவில் முன்பு உணவு முத்திரைகள் பெறுபவர்களுக்கே தற்சமயம் உணவுமுத்திரைகள் வழங்கப்பட்டுவருகின்றன (43)


## அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்
## பகிரங்க ஏல விற்பனை

எமது யாழ்ப்பாணம் மரக்காலையில் உள்ள (22) மலைவேம்பு குற்றி மரங்கள் (Mahognay Logs) — 126.0 கன அடி 1990—04—28ஆம் திகதி சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் என்னால் விற்பனை செய்யப்படும். ஏலத்தில் வாங்க விரும்புவோர் ஏலத்தில் விடப்படும் மரங்களை முன்கூட்டியே பார்வையிடலாம்.

மேலதிக விபரங்களுக்கு யாழ்ப்பாணம் மரக்காலை பொறுப்பதிகாரியுடனோ அல்லது எம்முடனோ தொடர்பு கொள்ளவும்.

பிரதேச முகாமையாளர்,
வடபிராந்தியம்.

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்,
25, கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

(B.816)



யாழ்ப்பாணம் பல. நோ. கூ. சங்கம்
(வரைவுள்ளது)

## தேயிலை வெற்றுப் பெட்டி பால்மா வகை வெற்றுப் பெட்டி

## விற்பனை

எம்மிடம் 65 தேயிலை வெற்றுப் பெட்டியும், 150 கடதாசி வெற்றுப் பெட்டியும் விற்பனைக்குண்டு. விண்ணப்ப முடிவுத் திகதி 30—4—90 பிற்பகல் 4-00 மணியாகும்.

யாழ். ப. நோ. கூ. சங்கம், பொது முகாமையாளர்
259, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(B.817)



## அறிவித்தல்

தவிர்க்கமுடியாத காரணத்தினால் எதிர் வரும் சனி, ஞாயிறு (28, 29) ஆகிய தினங்களில் விரிவுரைகள் நடைபெறமாட்டாது. இத் தினங்களுக்கு பதிலான விரிவுரைகள் மே 9, 10 ஆகிய திகதிகளில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

உதவிப் பதிவாளர்,
பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(R-430)

## சிந்தனைக்கு

அனுபவத்தை விவேகத்துடன் பயன்படுத்திக்கொண்டால் எதுவுமே வீணானதல்ல.

- ஃபிரான்ஸிவாரெனேரொதென்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 25 - 04 - 90

தொலைபேசி

ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாக பீடம்: 2208

# பேச்சுக்களும் வினாக்களும்!

“நாம் இதுவரை எதிர்த்துப் போராடிய சிங்கள பௌத்த பேரினவாதம் முற்றாக அழிந்துவிடவில்லை. அத்துடன் தெற்கில் நல்ல மனமாற்றமும் ஏற்படவில்லை. ஆகவே தமிழ் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்” என்று விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா) நேற்று முன்தினம் மாலை யாழ். கோட்டை முற்றவெளி மைதானத்தில் தேனிசைச் செல்லப்பாவின் இசை நிகழ்ச்சியில் திரண்டிருந்த இலட்சக்கணக்கான மக்கள்முன் உரை நிகழ்த்துகையில் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள சாந்தியும் சமாதானமும் மக்களுக்கு ஒரு மயக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

இன்னும் நிலைமை தெளிவாக இல்லை. தென்னிலங்கையில் பேரினவாத அரசியல்வாதிகள் மட்டுமல்ல பேரினவாதப் பத்திரிகைகளும் மீண்டும் குட்டையைக் குழப்புவதற்கான முயற்சிகளையே மேற்கொண்டு வருகின்றன. நிலைமை நீறுபூத்த நெருப்பாகவே இருக்கிறது.

தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்தலாம் என்றும் இலங்கைக்குக் கிடைத்த சுதந்திரம் சிங்கள பௌத்தர்களுக்குத்தான் கிடைத்த சுதந்திரமேயென்று நிலைநாட்டவும் சிங்களப் பேரினவாதிகள் தீவிரமாக முனைந்து அதில் வெற்றியீட்டக்கூடிய தருணத்தில்தான் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினர்.

தமிழ் பேசும் மக்களின் சுதந்திரத்துக்கும் பாதுகாப்புக்கும் ஆயுதமேந்தியவர்கள் பல குழுக்களாகி, ஆயுதம் ஏந்திய நோக்கத்தையே மறந்து மக்கள் விரோத சக்திகளாக மாறினர். இன்று அவர்கள் மக்கள் மத்தியில் இல்லை.

# சிறு தீவுகளில் அரசசேவைகளின் தரம் குறைவானது

2. காரைதீவு - நாரந்தனைப் பாதை இப்பாதை வேலணைத் தீவையும் காரை தீவையும் பாலமுனை-தோப்புக்காடு ஆகிய இரு இடங்களையும் இணைப்பதன் மூலம் உருவாக்கலாம். இந்நீரிணை சற்று ஆழமாக இருப்பினும் மிக ஒடுக்கமாக இருப்பதனால் இப்பாதை அமைப்பது சிரமம் அன்று. இப்பாதை அமைக்கப்படின் இவ்விரு தீவுகளுக்குமிடையேயான போக்குவரத்து ஏற்படுத்தப்படுவதுடன், ஊர்காவற்றுறை நகரை வலிகாமம் பகுதிகளுடன் நேரடியான வீதிப்போக்குவரத்தால் இணைக்க முடியும். இதன் மூலம் நலிவுற்றிருக்கும் ஊர்காவற்றுறை நகருக்குப் புத்துயிர் கொடுக்க முடியும். மேலும் காரைதீவு மக்களையும் மீண்டும் தீவுப் பகுதியின் செல்வாக்குக் கீழ் கொண்டு வரலாம்.

3. எழுவைதீவு - உறுண்டமுனைப்பாதை. உறுண்டி முனையில் இறங்குதுறை அமைக்கப்பட்டு எழுவைதீவுக்கும் உறுண்டமுனைக்கும் இடையே கடற் போக்குவரத்து வசதி விருத்தியாக்கப்பட்டால் எழுவைதீவு மக்கள் கூடிய பலனைப் பெறுவர்.

4. அனலை தீவு - கண்ணகியம்மன் இறங்குதுறை. கண்ணகியம்மன் இறங்கு துறை அமைப்கப்படின் அனலைதீவுக்குமிடையேயுள்ள போக்கு

**தீவுப்பகுதி மக்கள் மத்தியில் ஏற்பட்டுவரும் சமூக பொருளாதார வளர்ச்சி காரணமாக நகராக்கப் பண்புகள் வளர்ந்து வருவதால் இதற்கேற்ப வேலணை வங்களாவடிப் பகுதியை ஒரு நகராக விருத்தி செய்தல் வேண்டும் தற்போதைய நகரமையம் புதிய முறையில் விருத்தி செய்யப்படுவதுடன் வீதியமைப்பு முறையில் பல முன்னேற்றங்கள் ஏற்படவேண்டும்**

படுத்தப்பட வேண்டும். இதன் மூலம் நயினாதீவுக்கு யாத்திரிகர்கள் நேரடியாகப் போக்குவரத்துச் செய்யும் வாய்ப்புக் கிட்டும். இதன் மூலம் இத்தீவின் பொருளாதாரம் மேம்படலாம்.

## குடிசன மீள்பரம்பல்

தீவுகளின் இடஞ்சார்பு அபிவிருத்தியில் குடிசனமீள பரம்பல் எவ்வளவு முக்கியமானது என வினாவுமிடத்து வேலணைத் தீவில் மாத்திரம் குறிப்பிடத்தக்க மீள்பரம்பல் நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கேற்ற சூழ்நிலை காணப்படுகிறது. ஏனைய தீவுகள் பரப்பில் மிகச்சிறியனவாக இருப்பதனாலும், நெடுந்தீவு மிகத் தொலைவிலும் குடிசனப் பிரச்சினை இன்றி இருப்பதாலும் குடிசன மீள் பரம்பல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியநிலை ஏற்படாது. வேலணைத்தீவில் கிழக்கு அரைப்பகுதியில் குடிசன மீள் நடவடிக்கை மூலம் காணி அபிவிருத்தி நடவடிக்கைகளுடன்வாழிடத் தேவைக்கான காணிப்பற்றாக் குறையையும் ஓரளவு தீர்க்க முடியும். இப்பகுதியில் குடியிருப்புக்களை விருத்தியாக்கக் கூடிய நிலப்பரப்புகள் நன்னீர் வசதியுடன் காணப்படுவதால் குடியிருப்புவிருத்திக்கு இவற்றைப்பயன்படுத்தலாம். வேலணைத்தீவில் குறிப்பாகத்

பகுதிக்கு இடம் பெயர்ந்த நடவடிக்கை மேற்கொள்ளப் படவேண்டும். சாட்டி, மணியங்காடு, மண்கும்பான், அல்லைப்பிட்டி ஆகிய இடங்களில் புதிய குடியிருப்புக்களை அமைக்கக்கூடிய இடப்பரப்புகள் காணப்படுகின்றன. ஆயினும் மணல் அகற்றுதல் காரணமாக இவ்வசதியுள்ள பரப்புகளும் மீள் பரம்பலுக்கு பொருத்தமற்றதாகலாம்.

தீவுப்பகுதியின் இன்றைய குடிசனத்தொகை 85,000க்கு மேற்பட்டுள்ளது. இந்த நூற்றாண்டின் இறுதியில் ஒரு லட்சம் மக்கள் வாழும் பிரதேசமாக இருக்கும். இப்பிரதேச மக்களின் பல்வேறு சமூக பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதொரு சேவை நிலையமாக வேலணை வங்களாவடி விருத்தியாக்கப்படல் வேண்டும். யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்தில், யாழ்ப்பாணம், கொடிகாமத்துக்கு அடுத்து வேலணை மூன்றாவது முக்கிய நிர்வாக மையமாக வளர வழிவகுக்கும்.

## வேலணையை நகரமாக விருத்தி செய்ய வேண்டும்

தீவுப்பகுதி மக்கள் மத்தியில் ஏற்பட்டுவரும் சமூக-பொருளாதார வளர்ச்சி காரணமாக நகராக்கப் பண்புகள் வளர்ந்து வருவதால் இதற்கேற்ப வேலணை வங்களாவடிப் பகுதியை ஒரு நகராக விருத்தி செய்தல் வேண்டும். தற்போதைய நகரமையம், புதிய முறையில் விருத்தி செய்யப்படுவதுடன், வீதியமைப்பு முறையில் பல முன்னேற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இச்சேவை நிலையம் தீவுகள் முழுவதற்கும் பொறுப்பான காரியாலயங்கள் உயர் மட்ட வர்த்தக நிறுவனங்கள், வங்கிகள் போன்ற பல

சார்ந்து தீவுப்பகுதிக்குரிய தொழில் நுட்பக் கல்லூரி அமைக்கப்பட வேண்டும். யாழ்ப்பாண மாவட்டத்தின் அடுத்த தொழில்நுட்பக்கல்லூரி தீவுப்பகுதியிலேயே இடவமைவு பெறவேண்டும்.மேற்படி கல்லூரியில் கவனிப்பாரற்று இருக்கும் விடுதிக்கட்டிடங்கள் இதன் ஆரம்ப நிலைக்கு பொருத்தமானவை.

## சேவை நிலையங்கள் விருத்தி செய்ய வேண்டும்

ஒவ்வொரு தீவின் குடிசனத் தொகைப் பண்பு, பொருளாதாரப் பண்புகளுக்கு ஏற்ப சேவை நிலையங்கள் விருத்தியாக்கப்படவேண்டும். வேலணைத் தீவும், புங்குடுதீவும் குடிசனத்தொகை கூடுதலாக இருப்பதால் ஒன்றுக்கு மேற்பட்ட சேவை நிலையங்களையும் ஏனைய தீவுகள் ஒவ்வொரு சேவை நிலையத்தையும் கொண்டிருக்கலாம். புங்குடுதீவில் பெருங்காட்டுச் சந்தியும், நெடுந்தீவில் ஆஸ்பத்திரியடியும் நயினாதீவில் நயினாதீவு–மத்தி அனலைதீவில் அனலைதீவு – மத்தியும், மண்டைதீவில் மண்டைதீவு மத்தியும் எழுவைதீவில் எழுவைதீவு மத்தியும் அவ்வவ் தீவுகளின் முக்கிய சேவை நிலையங்களாக விருத்திசெய்யப்பட வேண்டும். இந்நிலையங்களில்

**பொ: பாலசுந்தரம்பிள்ளை Ph. D.**

முக்கிய காரியாலயங்கள் தபாற்கந்தோர், பாடசாலை கூட்டுறவுச்சங்கக்கடை, கிராம வங்கி மற்றும் வர்த்தக நிறுவனங்கள் இடம்பெறவேண்டும். புங்குடுதீவில் இறுப்பிட்டி, கிழக்கூர் பகுதிகளில் சிறிய சேவை நிலையங்கள் விருத்திசெய்யப்படவேண்டும். வேலணைத்தீவில் வேலணை வங்களாவடிக்கு அடுத்து புளியங்கூடல் மற்றும் அல்லைப்பிட்டி, மண்கும்பான், சரவணை, நாரந்தனை, சாரம்பன் ஆகிய இடங்களில் சிறிய சேவை நிலையங்கள் விருத்தியாக்கப்படவேண்டும்.

## புங்குடுதீவு

புங்குடுதீவு 15,000 க்கு மேற்பட்ட மக்களையும் 28.9 சதுர

காரியாலயம், ஆஸ்பத்திரி மற்றும் பல காரியாலயங்கள் இங்கு விருத்தி பெற்றுள்ளன. வர்த்தக நிறுவனங்களும் காணப்படுகின்றன. இங்கு வேலை செய்யும் அரச ஊழியர்கள் கூடியளவில் பிற பகுதிகளைச் சேர்ந்தவர்களாக இருப்பதாலும், இதுவொரு கஷ்டப் பிரதேசமாக இருப்பதாலும் சிறந்த சேவையைப் பெறுவது கடினமாக இருக்கிறது. மேலும் இத்தீவின் வளர்ச்சிக்கு குடிநீர், மின்சாரம், போக்குவரத்து விருத்திகள் தேவையாக உள்ளன. நெடுந்தீவு பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்கள் கூடிய எண்ணிக்கையில் வடமாகாணத்தில் பல பகுதிகளில் வாழ்கின்றனர். இவர்களை நெடுந்தீவுக்கு வருடத்தில் ஓரிரு முறை வந்துபோகக் கூடிய சூழ்நிலைகள் உருவாக்கப்படுவதுடன் சுற்றுலாத் துறை வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

நயினாதீவு 4000 க்கு மேற்பட்டமக்களையும் 5.7 சதுரகிலோமீற்றர்பரப்பையும்உடையது. இது யாத்திரிகர்கள் பெருமளவில் வந்துபோகுமிடமாக இருந்து வருகின்றது. இதனால் யாத்திரிகர்களை அடிப்படையாகக் கொண்ட விடுதிகள் வளர்ச்சிக்கு இடமுண்டு. தீவின் இறங்குதுறைகள் நாகபூஷணி அம்மன் ஆலயத்திற்கு அருகிலும் வங்களாவடியிலும் அண்மைக் காலத்தில் பௌத்த விகாரைக்கு அருகிலும் அமைந்துள்ளன. கிராமத்தின் முக்கிய சேவை நிலையம் தீவின் மத்தியில் காணப்படுகின்றது. இங்கு காணப்படும் மகாவித்தியாலயம் தபாற்கந்தோர் மற்றும் அரச காரியாலயங்கள், வர்த்தக நிறுவனங்கள் மேலும் விருத்தி செய்யப்பட வேண்டும்.

## எழுவைதீவு

எழுவைதீவு 400 க்கு மேற்பட்ட மக்களையும், இரண்டு சதுர கிலோ மீற்றர் பரப்பையும் கொண்டுள்ளது. இங்கு இந்து கத்தோலிக்க மக்கள்

இன்னும் நிலைமை தெளிவாக இல்லை. தென்னிலங்கையில் பேரினவாத அரசியல்வாதிகள் மட்டுமல்ல பேரினவாதப் பத்திரிகைகளும் மீண்டும் குட்டையைக் குழப்புவதற்கான முயற்சிகளையே மேற்கொண்டு வருகின்றன. நிலைமை நீறுபூத்த நெருப்பாகவே இருக்கிறது.

தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்தலாம் என்றும் இலங்கைக்குக் கிடைத்த சுதந்திரம் சிங்கள பௌத்தர்களுக்குத்தான் கிடைத்த சுதந்திரமேயென்று நிலைநாட்டவும் சிங்களப் பேரினவாதிகள் தீவிரமாக முனைந்து அதில் வெற்றியீட்டக்கூடிய தருணத்தில்தான் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினர்.

தமிழ் பேசும் மக்களின் சுதந்திரத்துக்கும் பாதுகாப்புக்கும் ஆயுதமேந்தியவர்கள் பல குழுக்களாகி, ஆயுதம் ஏந்திய நோக்கத்தையே மறந்து மக்கள் விரோத சக்திகளாக மாறினர். இன்று அவர்கள் மக்கள் மத்தியில் இல்லை.

தமிழ் பேசும் மக்களின் சுதந்திரத்துக்கும் பாதுகாப்புக்கும் கௌரவத்துக்கும் பொறுப்பாக மக்களின் பலத்துடனும் மனோபலத்துடனும் ஆயுதந்தாங்கி நிற்கும் விடுதலைப் புலிகளை அழிக்க முற்பட்டுத் தோல்வி கண்ட ஜே. ஆர். அரசு அந்தப் பொறுப்பை ராஜீவின் தலையில் சுமத்தியது.

ராஜீவும் இந்தியப்படையும் விடுதலைப் புலிகளை வெற்றிகொள்ள முடியவில்லை. இவர்களுக்கு உடந்தையாக இருந்த குழுக்களும் இன்று மறைந்து போனாலும் மீண்டும் கெடுதி செய்வதற்குக் காத்திருக்கின்றன; தயாராகிக்கொண்டிருக்கின்றன.

தமிழக முதல்வர் கருணாநிதி எடுத்த முயற்சிகளை பத்தொன்பது அம்சக் கோரிக்கையை வைத்துத் தடுத்தவர்கள் இப்பொழுது இலங்கை அரசுடன் பேச்சு நடத்தப் போகிறார்கள்.

இலங்கை அரசு இந்தக் குழுவுடன் என்ன பேசுமோ ஏது பேசுமோ நமக்குத் தெரியாது. ஆனால் பின்வரும் கேள்விகளுக்கு ஈ. பி. ஆர். எல். எவ்விடமிருந்து இலங்கை அரசு விடைகளைப் பெற்றுக்கொண்ட பின் பேச்சு நடத்துவது பயனுள்ளதாக இருக்கும்.

வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் எங்கே?

ஆயுதங்களுடன் தலைமறைவான தொண்டர் படையினரும் தமிழ்த் தேசிய இராணுவத்தினரும் எங்கே?

இரண்டு வருட காலத்துள் இந்தியா கொடுத்த பண உதவியும் எவ்வளவு?

இப்பொழுது பாண்டிச்சேரியில் எத்தனை பேருக்கு தோ பயிற்சி அளித்து வருகிறது?

பத்தொன்பது அம்சக் கோரிக்கையைத் தயாரித்தது யார்?

இந்தக் கேள்விகளுக்கு விடை கிடைத்தால் பல உண்மைகள் வெளியாகும்!

---

நகராக விருத்தி செய்தல் வேண்டும் தற்போதைய நகரமையம் புதிய முறையில் விருத்தி செய்யப்படுவதுடன் வீதியமைப்பு முறையில் பல முன்னேற்றங்கள் ஏற்படவேண்டும்

---

முடியும். மேலும் காரைதீவு மக்களையும் மீண்டும் தீவுப் பகுதியின் செல்வாக்குக் கீழ் கொண்டு வரலாம்.

3. எழுவைதீவு - உறுண்ட முனைப்பாதை. உறுண்டி முனையில் இறங்குதுறை அமைக்கப்பட்டு எழுவைதீவுக்கும் உறுண்ட முனைக்கும் இடையே கடற் போக்குவரத்து வசதி விருத்தியாக்கப்பட்டால் எழுவைதீவு மக்கள் கூடிய பலனைப் பெறுவர்.

4. அனலை தீவு - கண்ணகியம்மன் இறங்குதுறை. கண்ணகியம்மன் இறங்குதுறை அமைப்கப்படின் அனலைதீவுக்குமிடையேயுள்ள போக்குவரத்து வசதி அதிகரிக்கும். இதனால்இத்தீவின் தனிமைத் தன்மை குறைவடையலாம்.

5. குறிகாட்டுவான்-நயினாதீவு. இவ்விரு இறங்குதுறைகளுக்குமிடையே வாகனங்களை எடுத்துச் செல்லக் கூடிய பாதைச்சேவைகள் ஈடுலும் குடிசனப் பிரச்சினை இன்றி இருப்பதாலும் குடிசன மீள் பரம்பல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியநிலை ஏற்படாது. வேலணைத்தீவில் கிழக்கு அரைப்பகுதியில் குடிசன மீள் நடவடிக்கை மூலம் காணி அபிவிருத்தி நடவடிக்கைகளுடன்வாழிடத் தேவைக்கான காணிப்பற்றாக் குறையையும் ஓரளவு தீர்க்க முடியும். இப்பகுதியில் குடியிருப்புக்களை விருத்தியாக்கக் கூடிய நிலப்பரப்புகள் நன்னீர் வசதியுடன் காணப்படுவதால் குடியிருப்புவிருத்திக்கு இவற்றைப்பயன்படுத்தலாம். வேலணைத்தீவில் குறிப்பாகத் தெற்குப்பகுதி குடிநெருக்கம் மிக்கதாகவும் சமூகம் பொருளாதார ரீதியில் மெலிந்த பிரிவினரைக் கூடுதலாகக் கொண்டுள்ளது. இதனால் வேலணைத்தீவின் தெற்கு, மேற்குப் பகுதிகளில் இருந்து வேலணைத்தீவின் கிழக்குப்

...திய நிர்வாக மையமாக வளர வழிவகுக்கும்.

## வேலணையை நகரமாக விருத்தி செய்ய வேண்டும்

தீவுப்பகுதி மக்கள் மத்தியில் ஏற்பட்டுவரும் சமூக - பொருளாதார வளர்ச்சி காரணமாக நகராக்கப் பண்புகள் வளர்ந்து வருவதால் இதற்கேற்ப வேலணை வங்களாவடிப் பகுதியை ஒரு நகராக விருத்தி கெய்தல் வேண்டும். தற்போதைய நகரமையம், புதிய முறையில் விருத்தி செய்யப்படுவதுடன், வீதியமைப்பு முறையில் பல முன்னேற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இச்சேவை நிலையம் தீவுகள் முழுவதற்கும் பொறுப்பான காரியாலயங்கள் உயர் மட்ட வர்த்தக நிறுவனங்கள், வங்கிகள் போன்ற பல பொருட்களையும் சேவைகளையும் வழங்குமிடமாக இருக்கவேண்டும். தீவுப்பகுதியின் முன்னணிக் கல்வி நிலையமாக வேலணை சேர்.வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயம் விளங்குகின்றது. இக் கல்லூரியைச்

## பொ: பாலசுந்தரம்பிள்ளை Ph. D.

முக்கிய காரியாலயங்கள் தபாற்கந்தோர், பாடசாலை கூட்டுறவுச்சங்கக்கடை, கிராம வங்கி மற்றும் வர்த்தக நிறுவனங்கள் இடம்பெறவேண்டும். புங்குடுதீவில் இறுப்பிட்டி, கிழக்கூர் பகுதிகளில் சிறிய சேவை நிலையங்கள் விருத்திசெய்யப்படவேண்டும். வேலணைத்தீவில் வேலணை வங்களாவடிக்கு அடுத்து புளியங்கூடல் மற்றும் அல்லைப்பிட்டி, மண்கும்பான், சரவணை, நாரந்தனை, சாரம்பன் ஆகிய இடங்களில் சிறிய சேவை நிலையங்கள் விருத்தியாக்கப்படவேண்டும்.

### புங்குடுதீவு

புங்குடுதீவு 15,000 க்கு மேற்பட்ட மக்களையும் 28.9 சதுர கிலோ மீற்றர் பரப்பும் உடையது. இத்தீவிலிருந்து குடிசன வெளி இடப்பெயர்வு முக்கியமாக இருப்பினும் குடிசனத் தொகை அதிகரித்து வருவதனைக் காணலாம். மேலும் இடம்பெயர்ந்து சென்றவர்கள் தங்கள் கிராமத்துடன் உள்ள தொடர்புகளைத் துண்டிக்காதவர்களாக இருக்கின்றார்கள். இக்கிராமத்தினது பொருளாதாரம் வெளிப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன் இது விவசாயம் சாராத கிராமியக் குடியிருப்பாகவுள்ளது. மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வாக இருப்பதால் சிறந்ததொரு சேவைநிலையம் தேவைப்படுகின்றது. ஏற்கனவே பெருங்காட்டுச் சந்தி ஒரு சேவை நிலையமாக வளர்ச்சி பெற்றுள்ளது.இங்கு மகாவித்தியாலயம், தபாற் கந்தோர், வங்கி, ஆஸ்பத்திரி, கூட்டுறவுச்சங்கம், விவசாய விஸ்தரிப்புக் காரியாலயம் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் காணப்படுகின்றன. புங்குடுதீவு, நயினாதீவு ஆகிய இரு தீவுகளை உட்படுத்திய ஒரு உதவி அரசாங்க அதிபர் பிரிவும், புங்குடுதீவுக்கு ஒரு பிரதேச அபிவிருத்திச் சபையும் அமைக்கப்பட்டு இவற்றின் தலைமைக் காரியாலயம் பெருங்காட்டில் அமைய வேண்டும். இத்தீவின் ஏனைய இடங்களுக்கும் இந் நிலையத்திற்கும் இடையே போக்குவரத்து வசதி ஏற்படுமிடத்து இந்நிலையத்தின் வளர்ச்சி அதிகரிக்கும்.

### நெடுந்தீவு

நெடுந்தீவு 6000 மக்களைக் கொண்டதாகவும் 47.8 சதுர கிலோமீற்றர் பரப்பையும் உடையது. இத்தீவின் குடிசனத்தொகை ஏறக்குறைய இவ்வளவிலேயே இருக்கலாமெனக் கருதலாம், இதனது இடவமைவு காரணமாக ஏற்கனவே பல அரச செயற்பாடுகளைப் பெற்றுள்ளது. உதவி அரசாங்க அதிபர் பிரிவு, பிரதேச அபிவிருத்திக்

யத்திற்கு அருகிலும் வங்களாவடியிலும் அண்மைக் காலத்தில் பௌத்த விகாரைக்கு அருகிலும் அமைந்துள்ளன. கிராமத்தின் முக்கிய சேவை நிலையம் தீவின் மத்தியில் காணப்படுகின்றது. இங்கு காணப்படும் மகாவித்தியாலயம் தபாற்கந்தோர் மற்றும் அரச காரியாலயங்கள், வர்த்தக நிறுவனங்கள் மேலும் விருத்தி செய்யப்பட வேண்டும்.

### எழுவைதீவு

எழுவைதீவு 400 க்கு மேற்பட்ட மக்களையும், இரண்டு சதுர கிலோ மீற்றர் பரப்பையும் கொண்டுள்ளது. இங்கு இந்து கத்தோலிக்க மக்கள் சமமாக வாழ்கின்றனர். சிறிய தீவாக இருப்பது மாத்திரமல்லாமல் இரண்டு சமூகம் சரிசமனாக வாழ்வதால் இரு பகுதியினரையும் பூர்த்தி செய்ய வேண்டியதாகவுள்ளது. மீன்பிடி, பனையோலை வேலைகள், கோழி வளர்ப்பு முக்கிய தொழில்களாக இருக்கின்றன. தீவின் சனத்தொகை குறைவாக இருப்பதால் பல சேவைகள் உருவாக்கக்கூடிய ஆதார சனத்தொகை இல்லை. மக்களின் பல தேவைகளைப் பூர்த்தி செய்ய பல பகுதி நேரக் காரியாலயங்கள் அமைக்கப்பட வேண்டும். இக் காரியாலயங்கள் ஊர்காவற்றுறை அல்லது அனலைதீவிலிருந்து செயற்படுத்தலாம்.

### புளியங்கூடல்சந்தி

வேலணைத்தீவில் புளியங்கூடல் சந்தி ஒரு முக்கிய சேவை நிலையமாக உள்ளது. இக்கிராமத்து மக்கள் புதிய தொழில் நுட்பங்களை அறிமுகம் செய்வதில் திறன்மிக்கவர்கள். தீவுப்பகுதி பஸ் கொம்பனியை நடத்தியவர்களுள் இக்கிராமத்தைச் சேர்ந்தவர்களே கூடுதலாகக் காணப்பட்டனர். மின்சார உற்பத்தி யந்திரம்; ஒலி பெருக்கி, நீர் இறைக்கும் யந்திரம், உழவுயந்திரம், மா, தூள் அரைக்கும் ஆலை, அச்சு யந்திரம் போன்றன புளியங்கூடல் சந்தியிலேயே முதல் வளர்ச்சி பெற்றன. மேலும் கூட்டுறவு அபிவிருத்தி முயற்சிகள், இளைஞர் மாதர் சங்க நடவடிக்கைகளுக்கு இக்கிராமத்தின் பங்களிப்பு பெருமைக்குரியது. இதனால் இச்சந்தி கைத்தொழில்நெறி தொழில்நுட்பம் தொடர்பான சேவை நிலையமாக வளர வாய்ப்புண்டு.

(நாளை தொடரும்)

---

# போக்குவரத்துச் சீர்கேடு

ஆசிரியர்,
ஈழநாதம்

இலங்கை போக்குவரத்துச் சேவை தேசியமயமாக்கப்பட்டபோது எல்லோரும் நல்ல சேவை கிடைக்கும் என எதிர்பார்த்தவர். இன்று 31 வருடங்கள் சென்று விட்டன. பஸ் சேவை பற்றி குறைபடாதவர்கள் எவரும் இல்லை என்றே சொல்ல வேண்டும். அரசின் பொறுப்பு மக்களுக்கு உணவு, உடை, உறைவிடம் பிரயாண வசதி முதலியன வழங்குவதேயாகும். பதவிக்கு வந்த அரசுகள் யாவும் இவ் விடயத்தில் குறைபாடுகளுக்கு இலக்காகியே செயற்பட்டன. இம் மாற்றத்தினை செயற்படுத்த முடியாத அரசின் பிரதிநிதிகள் காலத்திற்கு காலம்வாக்குறுதிகளைவழங்கி காலத்தை கழித்து வந்தனர். பதவிக்கு வந்ததும் பத்திரிகை மாநாடுகள் நடாத்துவதும் மந்திரிகள் வெளிநாட்டுப் பயணங்கள் கட்டுப்படுத்தப் பட்டுள்ளன என விளம்பரங்கள் கொடுத்து வந்தார்கள். ஆனால் மக்கள் குறைகள் நீக்கப்பட்டனவா? முக்கியமாக நாட்டின் போக்குவரத்துச்சேவை எல்லாவற்றிலும் முதன்மை பெறுகின்றது. வடமாகாணத்தை பொறுத்தவரையில் சேவை மிகவும் மோசம் என்றே சொல்ல வேண்டும். பஸ்கள் இல்லை, இயந்திரம் இல்லை, உதிரிப் பாகங்கள் இறக்குமதி செய்ய வேண்டும் என்ற நிலைப் பாடே தொடர்கிறது. இதனை கேட்டு பொதுமக்களுக்கு அலுத்துப் போய்விட்டது.

பணம் இல்லை என்றால் அதனை பெற வழிவகைகள் காணப்பட வேண்டும். திறைசேரியால் பணம் இல்லை என்றால் இச்சேவைகளை நடாத்துவதற்கு மாற்று வழி காணப்படல் வேண்டும். நிதி பற்றாக் குறை இருந்தும் இடாம்பிக்செலவுகள் தொடர்கின்றன.

## மக்கள் மடல்

தாராள பொருளாதாரக் கொள்கையில் பிரதிபலிப்பு இன்று மினிபஸ் சேவை. இச்சேவையும் பொதுமக்களுக்கு நிறைவு கொடுப்பதாக இல்லை. இவற்றை கட்டுப் படுத்துவதற்கும் பொதுமக்களுக்கு நன்மை பயக்கக் கூடியதுமான உருப்படியான சட்ட நடைமுறைகள் இருப்பதாக தெரியவில்லை. தேசியமயமாக்கப்படுவதற்கு முன்னர் தனியார் பஸ் நிறுவனங்கள் இருந்தன.

வலிகாமம் மேற்கு, யாழ். பருத்தித்துறை வடஇலங்கை சென்றல் பஸ் போன்ற தனியார் நிறுவனங்கள் இச்சேவைகளை இ.போ.சாவும் மினிபஸ்சும் செய்கின்றன. பெருகிவரும் ஜனத்தொகைக்கேற்றாற் போல் போக்குவரத்து சேவைகள் விஸ்தரிக்கப்படவில்லை. முன்னர் இ.போசா சேவைநடைபெற்ற சில இடங்களுக்கு இன்று பஸ் சேவைகளேஇல்லை. மினிபஸ்சேவைகளும் வருமானம் தரக் கூடிய இடங்களையே பிடித்துக் கொண்டுள்ளனர்.

பஸ்சேவை அத்தியாவசியமான சேவையாகும். இதனை திறம்பட நடாத்தக் கூடியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். உதாரணமாக இலங்கையில் உள்ள நெசவாலைகள் திறமையுள்ளவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு இன்று நன்றாக இயங்குகின்றன. பொது மக்கள் நலனில் மிகவும் அக்கறை கொண்ட நாட்டின் ஜனாதிபதி இதனை உடன் கவனத்தில் கொள்வதற்கு சம்பந்தப்பட்ட இ.போ.சா சபைகள் மந்திரிமார்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். சுலபமான இலகுவான பிரயாணம் இருந்தால் தான் பிரயாணம் செய்பவர்களுக்கு நிம்மதி ஏற்படும். எமது பகுதியில் உள்ள போக்குவரத்து சாதனங்கள் மூலம் ஒருவர் பிரயாணம் செய்தால் அவர் தனது திறனை இழப்பதுடன் மனச்சஞ்சலத்திற்கும் ஆளாக வேண்டியிருக்கிறது. ஆகையால் இ.போ.சா பஸ் வண்டிகள் இல்லாது இயங்குவதால் ஏதாவது பயன இருக்குமா என்ற கேள்வி எழுவது நியாயமானதே. அத்துடன் கிராமப் புறங்களில் விவசாய உற்பத்தியில் ஈடுபட்டுள்ள கிராமவாசிகள் தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களை சந்தைப்படுத்துவதிலும் பல சிரமங்கள் உண்டு. போக்குவரத்து சீர் இல்லாததால் பொருளாதார கஸ்டங்களும் ஏற்படுகின்றன.

தி. செல்வகுமரர்
சுன்னாகம்

ஈழநாதம்

# தேசியபிரச்சினைகளைத்தீர்ப்பதற்கு சர்வகட்சி மகாநாடு ஒரு தளம்

(கொழும்பு)

ஒரு தரப்பிலோ அல்லது இரு தரப்பிலோ தீர்க்க முடியாத தேசிய பிரச்சினைகளை தீர்க்க சர்வ கட்சி மகாநாடு ஒரு தளம் என ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா நேற்று அரச பாராளு மன்றக் கூட்டத்தில்பேசும்போது கூறினார்

பிரச்சினைகளுடன் சம்பந்தப்பட்ட சகலருடனும் பேச்சுவார்த்தை, கருத்தொருமைப்பாடு, நல்லிணக்கம் என்பண மூலம் தீர்வு காண்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு எனத் தெரிவித்தார்.

இதுவெளிப்படையான அரசாங்கமாகும். மக்களுக்குத் தெரியாமல் எவருடனும் இரகசிய ஒப்பந்தத்தைச் செய்யமாட்டோம் என்றும் குறிப்பிட்டார்.

சர்வகட்சி மாநாடு இந்த நடைமுறைக்கு உதவுகிறது. சர்வகட்சி மாநாட்டில் சகல கட்சிகளாலும் இணக்கம் காணப்படவேண்டிய இருபது விடயங்களை இனம் காணப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

அந்த இருபது விடயங்களும் பின்வருமாறு எனவும் தெரிவித்தார், அதிகாரப்பரவலாக்கள், தேர்தல் சீர்திருத்தம், வாக்குரிமை, விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் எடுக்க வேண்டிய ஆகக் குறைந்த வாக்குகள், சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம் தொடர்புசாதனங்களைதாராளுமைப்படுத்தல் மொழிக்கொள்கையை திறம்பட அமுலாக்கல், கல்விக் கொள்கை, சகலரையும் சமமாகவும் சமத்துவமாகவும் நடாத்தல், தேசிய காணிக் கொள்கையை வகுத்தல், ஜனநாயக முறையை வலுப்படுத்தல், அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல் நாட்டின் சகல பாகங்களையும் சேர்ந்த சகலராலும் பாதுகாப்பை உறுதிப்படுத்தல், கட்சிமாறுவதற்கு அவகாசம் அளித்தல், பொதுக் கணக்கீட்டுக் குழுவை பலப்படுத்தல், பாராளுமன்ற ஆலோசனைக் குழுவை மிகையாக பயன் படுத்தல், மாவட்டங்களில் சகல கட்சி எம்பிக்களின் அமர்வுகள், ஒவ்வொரு எம்பிக்களுக்கும் இரு சட்ட ஆலோசகர்களை வழங்குதல், இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துதல் என்பனவே.

பிரதேச சபைகள், கிராமோதய சபைகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கை நாற்பது சதவீதம் அதிகரிப்பு, அவர்களை கட்சி சார்பற்ற முறையில் தெரிவு செய்தல் என்பனவும் சர்வகட்சி மாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் ஜனாதிபதிகூறினார்.

தனது அரசாங்கம் இத்தகைய பிரச்சினைகளை பகிரங்கமாக கலந்து கொண்டு தீர்த்து வைக்க விரும்புகிறது எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்,

## வடபகுதியில் இறால்வளர்ப்பைத் துரிதமாக்க அமைச்சு முயற்சி

(கொழும்பு)

வடபகுதியில் 1984 இல் ஆரம்பிக்கப்பட்ட இறால் வளர்ப்பை மீண்டும் ஆரம்பிக்க மீன்பிடி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

தேசிய சேவை இளைஞர் மன்றங்களுடன் சேர்ந்து இதனை நடைமுறைபபடுத்த அமைச்சு தீர்மானித்துள்ளது,

ஏற்கனவே காரைநகரில் ஆரம்பிக்கப்பட்டதுபோல அரியாலை, தொண்டமனாறு, சுண்டிக்குளம் ஆகிய பகுதிகளிலும் இறால் பண்ணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வடபகுதியில் இருந்து தினமும் பத்தாயிரம் ரூபா பெறுமதியான இறால் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

## நடேஸ்வராக் கல்லூரிக்கு

### அரச கரும

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

ள்கைக்கு மாறாக நடந்து வருகின்றன என்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளதால் அமைச்சர்கள் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்

இது குறித்து அவதானமாக இருக்குமாறும் அமைச்சர் பெஸ்டஸ்பெரேரா அரசகரும மொழி ஆணையாளருக்குஉத்தரவிட்டுள்ளார்

இச் சட்டத்திற்கு மாறாக நடந்து கொள்பவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

### பாகிஸ்தானுக்கு

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

ரேலியா அறிவித்தையடுத்து பாகிஸ்தான் பேச்சுவார்த்தைகளை நடாத்தியது.

இதனையடுத்தே பாகிஸ்தான் இவற்றை வாங்குவதற்குச் சம்மதம் தெரிவித்தது எனவும் அவர் குறிப்பிட்டார்.

### மத்திய கிழக்கு...

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் செய்யும் இலங்கையரின் நலனைப் பேணவும், இந்நாடுகளில் இலங்கையர்களுக்குப் பொருத்தமான தொழில் வாய்ப்புகளை கண்

### யாழ். மட்டு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னால் இப்பகுதி பயணிகள் பெரும் நன்மையடைந்தனர்.

ஒருடிப்போவால் மாத்திரம் இந்த சேவையை நடாத்த முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதே வேளை காலையில் இரு சேவைகள் மட்டக்களப்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் நடைபெறுகின்றன. அதில் ஒன்று விசேட சேவை. அதற்கான கட்டணமும் 110 ரூபா மற்றைய சாதாரண சேவைக்கு 55 ரூபா அறவிடப் படுகிறது.

இலாபத்தை நோக்கமாக நகாள்வதுமட்டுமல்ல மக்களுக்கு சிறந்த சேவைகளை வொடத்த வேண்டும் எனவும் அந்த அதிகாரி கூறினார்.(37

### கரவெட்டி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி

தூக்கத்தில் இருந்தவேளை யன்னல் கம்பிகளை உடைத்து உட்புகுந்த திருடர்கள் இத்துணிகரக் கொள்ளையை நடாத்திச் சென்றுள்ளனர்.

இதேநேரம் கரவெட்டி உச்சில் அம்மன் கோவிலுள் புகுந்த திருடர் கோஷ்டியினர் அங்கு எந்தவித பொருட்களு

## செடெக் நிறுவனக் குழு வடபகுதிக்கு விஜயம்

(விசேட நிருபர்)

இலங்கையில் பத்துமறை வட்டங்களில் சமூகப் பணியாற்றும்'' செடெக் நிறுவன அதிபர், இருபது உறுப்பினர்கள் அடங்கிய குழு மே மாதம் 2-ஆம் திகதி வடபகுதிக்கு விஜயம் மேற்கொள்ள இருக்கிறது.

வடபகுதிக்கு வரும்மேற்படி குழுவினர் யாழ்-மறை வட்ட மனித முன்னேற்ற நடுநிலையத்தின் வேலைத் திட்டங்களை மே மாதம் 5-ஆம் திகதிவரை நின்றுபார்வையிடுவர்.

2-ஆம் திகதி மாங்குளம் முல்லைத்தீவு பகுதிகளிலும் 3-ஆம் திகதி நாயாறு, கொக்கிளாய், கிளிநொச்சி, பாரதிபுரம், பொன்நகர், அமைதிபுரம் ஆரோக்கியநகர், பகுதிகளிலும் 4-ம் திகதி தேவன்குளம், வசாவிளான், சில்லாலைப் பகுதிகளிலும் வேலை திட்டங்களை 'செடெக்', குழுவினர் பார்வையிட்டு 5-ஆம் திகதி கொழும்பு திரும்புவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது (21)

### திருநெல்வேலி

(முதலாம் பக்கந் தொடர்ச்சி)

பிரயாணம் செய்த எவரும் காயமடையவில்லை. ஆனால் தேசியநாதன் என்பவரின் வீட்டு மதில் 20 அடிக்குமேல் முற்றாக இடிந்து விட்டது. பஸ்ஸின் பிறேக்லைன் அறுந்து விட்டதால் இவ்விபத்து ஏற்பட்டதாகச் சாரதி தெரிவித்தார்.

### வர்த்தக

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சகல வங்கிகளிலும் இருந்த சோதனைகள்இடம்பெற்றன.

இந்தியப்படை யாழ்.நகரை விட்டு வெளியேறியபின்னர் இவ்வாறான சோதனைகள் ஏனைய வங்கிகளில் நிறுத்தப்பட்டுள்ளன.

ஆனால் வர்த்தக வங்கியில் அடையாள அட்டை, பொதிகள் இவ்வாறு சோதனையிடப்படுவது குறித்து வாடிக்கையாளரும், பொதுமக்களும் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

### வீதியின்

(1 ஆம் பக்கத் தொதிர்ச்சி)

யன் கட்டு பகுதிகளில் வீதியைக் காணவும் முடியவில்லை இப்பகுயிதில் செல்லும் வாகனங்கள் பெரும் சிரமப்படுசின்கிறன.

மன்னார் பகுதி அலுவலகங்களில் பணிபுரியும் யாழ்ப்பாணப் பகுதி ஊழியர்கள் நேரத்துக்கு செல்லமுடியாது உள்ளனர்.

### தேர்தல் பதவி

(முதலாம் பக்க தொடர்ச்சி)

களில் இரண்டு முக்கியனவை என்றார் முதலாவது தமிழ் பேசும் மக்களின் பூகோள ஒருமைப்பாட்டை தாயகத்தை பேணிப் பாதுகப்பது அடுத்தது தமிழ்பேசும் மக்களின்சுயநிர்ணய உரிமைக்காக போராடுவது வடக்கும் கிழக்கும் எமது பூர்வீக மண் எமது பாரம் பரிய பிரதேசம் அவை எமது தாயகம் அதையாரும் பிரிக்கவோ அல்லது அபகரிக்கவோ முடியாது என்பது எமது உறுதியான முடிவாகும் என்றும் கூறினார்-

இந்தியா எங்களைக் காக்க வருகின்றது எமக்கு ஒருநாட்டைப் பெற்றுத்தரும் என்றெல்லாம் எமது மக்கள் கனவு கண்டபொழுது இந்தியாவின் நலன் எங்களுக்கு ஒரு நாட்டைப் பெற்றுத் தருவதோ அல்லது எங்கள் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதோ அல்ல தனது சொந்த நலனுக்காகவேஇந்தியா எமது போராட்டத்தில் தலையிட்டிருக்கின்றனறது என தீர்க தரிசனத்தோடு எமது அமைப்பு கூறியதை சில ஆண்டுகளின் பின் நிதர்சனமாக யதார்த்தமாக கண்முன்னாலேயே அவதானிக்க முடிந்தது என்றார். தமிழீழ போராட்டத்தை வழிநடத்துகின்ற விடுதலைப்புலிகள் இயக்கமும் அதன் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களும் என்றுமே தமிழ் பேசும் மக்களிற்கு துரோகம் செய்தது. கிடையாது இதுவரையிலே நாங்கள் எதையுமே விட்டுக் கொள்வதாகவரலாறு கிடையாது எமது போராட்டத்தில் பழைய தலைமுறைக்கும் இன்று போராகின்றபுதிய தலைமுறைக்கும் இடையே உள்ள வித்தியாசம் அன்று போராட்டத்தைதொடங்கினார்கள் அதைத் தொடர்ந்து நடத்துவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று தூரப்பரார்வை இருந்ததில்லை பெரிய அளவிலே அழுத்தங்கள் வந்தபோது அதை எதிர்த்து நின்று போராட வேண்டும் என்ற தியாக உணர்வு இருந்ததில்லை போராட்டத்தை இடையிலே கைவிட்டார்கள் ஆனால் நாங்கள் எதற்கும் ஆயத்தமாக இருக்கின்றோம் என்றும் கூறினார்

### கூட்டுறவுச்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா தெற்கில் தமிழ் பல நோக்கு கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கே முதல் முதல் இப் பணம் வழங்கப்பட உள்ளதாக இதோடு சம்பந்தப்பட்டவர்கள் தெரிவித்தன.

மேற்படி பொதுச் சபைக் கூட்டத்தில், வ தெ. ப. கூட்டுறவுச் சங்கம் என்று வழங்கப்பட்டுவரும் பெயரை வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் என்று பெயர் மாற்றம் செய்வதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதேசமயம், சமாஜம் தனக்கென ஓர் அச்சுக்கூடத்தையும் அமைக்க உள்ளதாகவும், சங்க வேலைகளுக்கும், வெளி வேலைகளுக்கும் இதைப் பயன் படுத்தலாம் என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

(தி)

### எதிர்க்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதிர் கட்சித் தலைவர் திருமதி சிறீமாபண்டாரநாயக்கா, திருமதி சந்திரிகா விஜய குமாரணதுங்கா ஆகியோரையும் திருபாலகுமாரன் சந்தித்துப் பேசவிருக்கிறார்.


## வீதியில் இரவு நேரம் வெளிச்சம் இல்லை

(அட்டாளைச்சேனை)

அட்டாளைச்சேனை 5ஆம் குறிச்சியில் தைக்ளைநகர் கிராமத்தில் பள்ளி வீதிஇரவு நேரங்களில் இருலைல் மூழ்கியுள்ளதால் இப்படிதி மக்கள் பெரிதும் கஸ்டப்படுகின்றனர்.

இங்குள்ள ஏனைய பாதைகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள் போதிலும் இந்த வீதிக்கு மட்டும் மின்சாரம் வழங்கப்படாதது குறித்து இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்,

## ஓராண்டு நினைவஞ்சலி



கட்சிகளாலும் இணக்கம் காணப்படவேண்டிய இருபது விடயங்களை இனம் காணப் பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

டுத்தல், பாராளுமன்ற ஆலோசனைக் குழுவை மிகை யாக பயன் படுத்தல், மாவட் டங்களில் சகல கட்சி எம் பிக்களின் அமர்வுகள், ஒவ்

# வடபகுதியில் இறால்வளர்ப்பைத் துரிதமாக்க அமைச்சு முயற்சி

(கொழும்பு)

வடபகுதியில் 1984 இல் ஆரம்பிக்கப்பட்ட இறால் வளர்ப்பை மீண்டும் ஆரம் பிக்க மீன்பிடி அமைச்சு நட வடிக்கை எடுத்துள்ளது.

தேசிய சேவை இளைஞர் மன்றங்களுடன் சேர்ந்து இதனை நடைமுறைபபடுத்த அமைச்சு தீர்மானித்துள்ளது,

ஏற்கனவே் காரைநகரில் ஆரம்பிக்கப்பட்டதுபோல அரியாலை, தொண்டமனாறு, சுண்டிக்குளம் ஆகிய பகுதி களிலும் இறால் பண்ணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வடபகுதியில் இருந்து தின மும் பத்தாயிரம் ரூபா பெறு மதியான இறால் வெளிநாடு களுக்கு அனுப்பப்பட்டு வருவ தாகவும் தெரிவிக்கப்படுகிறது

# நடேஸ்வராக் கல்லூரிக்கு 26 இலட்சம் ரூபா ஒதுக்கீடு

(காங்கேசன்துறை)

இருபத்தாறு இலட்சம்ரூபா செலவில் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரிக்குப் புதிய விஞ்ஞான ஆய்வுகூட மும், புதிய நூலகமும் நிர் மாணிப்பதற்கான அனுமதி யைக்கொழும்புகல்வியமைச்சு வழங்கியுள்ளது.

சுமார் 18 இலட்சம் ரூபா செலவில் விஞ்ஞான ஆய்வு கூடமும், சுமார் 8 இலட்சம் ரூபா செலவில் நூலகமும் அமையவுள்ளன.

சுமார் 95 வருட காலம் பழைமை வாய்ந்த விஞ்ஞான ஆய்வுகூடமும், நூலகமும் அண்மைக் கால இராணுவ நடவடிக்கைகளால் சேதமுற் றமை குறிப்பிடத்தக்கது.

பௌதீகப் பிரிவு, விலங்கியல் பிரிவு, தாவரவியல் பிரிவு, பொதுப் பிரிவு என்ற நான்கு பிரிவுகளைக் கொண்ட ஆய்வு கூடமும், உடனுதவும் பகுதி இரவல் கொடுக்கும் பகுதி என இரண்டு பிரிவுகளைக் கொண்ட நூலகமும் இணைந் துள்ள இக்கட்டிடத் தொகுதி கல்லூரிஅதிபரும், காங்கேசன் துறைக் கொத்தணி அதிபரு மான திரு. க. இராசதுரை யின் பெருமுயற்சியால்அமைக் கப்படவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (41)


## பொருளியல்

### ஆசிரியர் நா. கிருஷ்ணானந்தன்

பிரபல பொருளியல் ஆசிரியர் மறைந்த நா. கிருஷ்ணானந்தன் நினைவாக செய்யப்பட வுள்ள சேவைகள் தொடர்பாக ஆராய்வதற் கான கூட்டம் 27-04-90 ஆம் திகதி வெள்ளிக் கிழமை மாலை 4.00 மணிக்கு JAFFNA TECHNICAL INSTITUTE, Stanley, Road. (விக்னா டியூசன் சென்ரருக்கு அருகில்) இல் நடைபெறும்.

ஆசிரியர்கள், மாணவர்கள், நண்பர்கள், அபிமானிகள் ஆகியோரை அன்புடன் அழைக் கின்றோம்.

B/823 நண்பர்கள்.



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக் கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


நடந்து கொள்பவர்களுக்கு எதிராக கடுமையான நடவ டிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

## பாகிஸ்தானுக்கு

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

ரேலியா அறிவித்ததையடுத்து பாகிஸ்தான் பேச்சுவார்த்தை களை நடாத்தியது.

இதனையடுத்தே பாகிஸ் தான் இவற்றை வாங்குவதற் குச் சம்மதம் தெரிவித்தது எனவும் அவர் குறிப்பிட்டார்.

## மத்திய கிழக்கு...

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் செய்யும் இலங்கை யரின் நலனைப் பேணவும், இந்நாடுகளில் இலங்கையர் களுக்குப் பொருத்தமான தொழில் வாய்ப்புகளை கண் டறியவே இவ்மேற்கு ஆசிய நாடுகளுக்கு ஸ்ரீலங்காத் தூது வராலயங்களுடன் இணைந்து செயலாற்றும்படி தொழிலதி காரிகள் இரண்டு வருடங் களுக்கு முன் நியமிக்கப்பட் டார்கள்.

நாளொன்றுக்கு சுமார் 400 பேர்வரை தொழில் வாய்ப் புப் பெறக்கட்டுநாயக்கா சர் வதேச விமான நிலையம் வழி யாக மத்திய கிழக்கு நாடுகள் என்றழைக்கப்படும் மேற்கு ஆசிய நாடுகளுக்குச் செல்வ தாக ஸ்ரீலங்கா வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிரோவின் கணிப்பீடு ஒன்று கூறுகிறது. இவர்களில் 68 விகிதத்தினர் பணிப்பெண்களாகக் கடமை யாற்றச் செல்கிறார் என்றும் 25 விகிதத்தினர் தான் தங் களது பெயர்களை ஸ்ரீலங்கா வேலை வாய்ப்பு பிரோவில் பதிகிறார்கள் என்றும் மற்ற வர்களுக்கு இப்படி ஒரு ஸ்தா பனம் இருப்பதாகக் கூடத் தெரியாத என்று தொழில் அமைச்சு வட்டாரங்கள் தெரி வித்தன.

## எல்லைக் கிராம

(1ஆம் பக்கத தொடர்ச்சி)

இடம் பெயர்ந்த தமிழர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

1984இல் இந்த தமிழ்க் குடும்பங்கள் தற்போது மாவம முன்மாரி என்றஇடத் திற்கு இடம் பெயர்ந்துள்ள னர்.

இவர்களின் இந்தக்கோரி க்கை மற்றும் இக் கிராமத் தின் தற்போதைய நிலைமை கள் குறித்து அரசுடன் பேச்சு நடாத்தப்படும் என திரு. கரி காலன் தெரிவித்தார்.

இதே வேளை இந்தக் கிரா மம் அம்பாறை மாவட்டத் திற்குள் இருப்பதாக அம் பாறை அரசாங்க அதிபரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருப்பதாக மட்டக்களப்பு அரசாங்க அதிபரும் தெரி விக்கின்றனர்.

கும் நடைபெறுகின்றன. அதில் ஒன்று விசேட சேவை. அதற் கான கட்டணமும் 110 ரூபா மற்றைய சாதாரண சேவை க்கு 55 ரூபா அறவிடப் படுகி றது.

இலாபத்தை நோக்கமாக நகாள்வதுமட்டுமல்ல மக்க ளுக்கு சிறந்த சேவைகளை ரொடத்த வேண்டும் எனவும் அந்த அதிகாரி கூறினார்.(37

## கரவெட்டி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி

தூக்கத்தில் இருந்தவேளை யன்னல் கம்பிகளை உடைத்து உட்புகுந்த திருடர்கள் இத் துணிகரக் கொள்ளையை நடாத்திச் சென்றுள்ளனர்.

இதேநேரம் கரவெட்டி உச் சில் அம்மன் கோவிலுள் புகுந்த திருடர் கோஷ்டியினர் அங்கு எந்தவித பொருட்களு மின்றி ஏமாற்றத்துடன் சென் றனர்.

இதற்கு சில தினங்களுக்கு முன்னர் முதலைக்குழிமுருகன் கோவிலுள் புகுந்த கொள்ளை யர் கோஷ்டியொன்று ஆலயத் திலுள்ள சில பெறுமதி வாய்ந்த பொருட்களை பொருட்களை கொள்ளையிட் டுச் சென்றுள்ளதாகத் தெரி விக்கப்பட்டுள்ளது. (18)

## தேசிய

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாய்ப்புக்கடன்கள் வழங்கப் படும் என தேசிய இளைஞர் சேவைகள் மன்ற பொது முகாமையாளர் திரு. ரஞ்சித் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

இந்தியப்படை யாழ்.நகரை விட்டு வெளியேறியபின்னர் இவ்வாறான சோதனைகள் ஏனைய வங்கிகளில் நிறுத்தப் பட்டுள்ளன.

ஆனால் வர்த்தக வங்கியில் அடையாள அட்டை, பொதி கள் இவ்வாறு சோதனையிடப் படுவது குறித்து வாடிக்கை யாளரும், பொதுமக்களும் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

## வீதியின்

(1 ஆம் பக்கத் தொதிர்ச்சி)

யன் கட்டு பகுதிகளில் வீதி யைக் காணவும் முடியவில்லை இப்பகுயிதில் செல்லும் வாக னங்கள் பெரும் சிரமப்படுசின் கிறன.

மன்னார் பகுதி அலுவல கங்களில் பணிபுரியும் யாழ்ப் பாணப் பகுதி ஊழியர்கள் நேரத்துக்கு செல்லமுடியாது உள்ளனர்.

மன்னார்,கிளிநொச்சி,யாழ் ப்பாண மாவட்டங்களை இணைக்கும் இந்த வீதியைத் திருத்த மூன்று அரசாங்க அதி பர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக் கள் கோரிக்கை விடுத்துள்ள னர்.

இதேவேளை மன்னார்–யா ழ்ப்பாண பஸ் சேவைக்கு போதிய பஸ்கள் சேவையிலீ டுபவதில்லை என்றும் தினமும் நெரிசலாகவே பயணிகள் செல்வதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

ஊழியர்களின் நன்மைகருதி திங்கள் வெள்ளி ஆகிய தினங் களில் மேலதிகமாக பஸ் சேவைகளை நடாத்துமாறும் கோரிக்கை விடுத்துள்ளது. (60)

## ஆயுதம் தாங்கிய

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

தால் எமது மண்ணைப் பறிப் பதன்மூலம் எமதுதாயகத்தை அபகரிக்க நீண்ட காலமாகச் சிங்கள அரசு முயன்று வந்தது

இன்று நாம் ஸ்ரீலங்கா அரசு டன் பேசிக்கொண்டிருக்கின் றோம். கிழக்கே குறிப்பாகத் திருக்கோணமலையைப் பார் த்தபோது சிங்களப் பேரின வாத சிந்தனை மாற்றம்காண வில்லை என்பதை அறிந்து கொண்டேன் எனவும் கூறி னார்.

புலிகளேஆயுதங்களை எமக் கும் தாருங்கள். எமது மண் ணைப் பாதுகாக்க நாங்கள் உங்களோடு சேர்ந்துபோராடு வோம் என்று மக்கள் கேட் கின்றார்கள்.

எமது ஆயுதங்கள் எப்போ தும் எம் கையோடு தானிருக் கும். தமிழ்ப் பேசும் மக்களின் பாதுகாப்பே எமது ஆயுதங் கள். எமது தாய் மண்ணை யாரும் அபகரிப்பதைத் தொடர்ந்தும் நாம் அனுமதி க்க முடியாது.

எமது போராட்டத்திற்குத் தீவுப்பகுதி மக்கள் எவ்வளவு கஷ்டங்களுக்கு மத்தியிலும் முழுமையாக ஆதரவு தந்த தையும் தருவதையும் எங் களால் மறக்க முடியாது.

எனவேதான் உங்களைப் பார்த்துச் சொல்கிறேன். சிங் களப் பேரினவாதம் இன்னும் அழிந்து விடவில்லை. சிங்கள பேரினவாதிகளின் மனம்மாற் றம் கண்டுவிடவில்லை. விழிப் பாக இருங்கள். எமது சுய நிர்ணய உரிமையைப் பெறும் வரை எமக்கு விடுதலை என் பது கிடையாது எனவும் தெரி வித்தார்.

இத் தேனிசை செல்லப்பா வின் இசை நிகழ்ச்சியை யாழ். மாவட்டப் பொறுப்பாளர் திரு. பானுவும், தீவுப்பகுதிப் பொறுப்பாளர் திரு. ஜேம்ஸ் அவர்களும் மங்கள விளக்கேற் றியாரம்பித்து வைத்தார்கள் நிகழ்ச்சிக்குத்தலைமைவகித்த தீவுப்பகுதி அரசியற் பொறுப் பாளர் திரு. காஸ்ரோ உரை யாற்றுகையில் உன்னத இலட் சியத்திற்காக:உயிர்நீத்த தியா கிகளின் தியாகங்களே எமது இனத்தின் தனித்துவத்தை உலக அரங்கில் எடுத்துக் காட் டக் காரணமாக அமைந்தது என்றார்.

(தி)

## எதிர்க்

( 1ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதிர் கட்சித் தலைவர் திருமதி சிறீமாபண்டார நாயக்கா, திருமதி சந்திரிகா விஜய குமாரணதுங்கா ஆகி யோரையும் திருபாலகு மாரன் சந்தித்துப் பேசவிருக் கிறார்.

நேரங்களில் இருளை மூழ்கி யுள்ளதால் இப்படிதி மக்கள் பெரிதும் கஸ்டப்படுகின்றனர்.

இங்குள்ள ஏனைய பாதை களுக்கு மின்சாரம் வழங்கப் பட்டுள் போதிலும் இந்த வீதிக்கு மட்டும் மின்சாரம் வழங்கப்படாதது குறித்து இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்,


## ஓராண்டு நினைவஞ்சலி



### கப்டன் ரங்கன் துரைசிங்கம் ஜெயரங்கன்

புன்னாலைக்கட்டுவன் வடக்கு

தாயின் மடியில் 2 - 4 - 1963

தாயக மண்ணில் 21 : 4 - 1989

போர்க்களம் இங்கொரு
ஏர்க்களமானது...
விதையென விழுந்த எம்
ரங்கனே இனி யொரு
விருட்சமாய் எழுந்திடு விழுதுகள் விட்டிடு
நினைவிலே உயிர்த்தெழு
நீள்துயில் கலைத்திடு
சுதந்திர தாயகப் பூமியில் நீயொரு
சுடரொளிக் கதிரென ஒளிதெறி உலவிடு
விடியலின் ஒளியென
செறிந்தனை நிறைந்திடு...

B 676 நண்பர்கள்